# வலு

ஜனவரி - மார்ச் 2016 காலாண்டிதழ் இதழ் - 9

ரூபா 100



## தடைகள் தகர்த்த நடிகை

கோபம் மாரடைப்பை ஏற்படுத்துமா?

## மாற்றுத்திறனாளிகளின் உரிமை,பாதுகாப்பு மற்றும் சவால்கள்

வெளியீடு
கருவி
மாற்றுத் திறனாளிகளின் சமூகவள நிலையம்



சிறந்த சலவைக்கும்!
பளிச்சிடும் வெண்மைக்கும்!
Shine
Detergent Liquid
* உயர்தர நுட்ப முறையில் தயாரிக்கப்பட்ட Shine திரவ சலவை சவர்க்காரம்
* ஆடைகளினதும் சலவை இயந்திரத்தினதும் பாவனைக் காலத்தை கூட்டவல்லது
* இலகுவில் கரையும் தன்மை கொண்டது
* கைகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தாது
* நீர் சிக்கனத்திற்கு உகந்தது
* சாதாரண சலவைக்கும் இயந்திர சலவைக்கும் மிகவும் உன்னதமானது
2in1
Shine
Detergent Liquid
500ml
2in1
Shine
Detergent Liquid
300ml
Manufactured & Distributed By:
Karuvi Centre for Social Resource of Differently Abled
1166/15, Arulampalam Lane, Nallur North, Jaffna.
Tel: 021 321 8059 / 0777 158329
email: karuvi.pro@gmail.com

இதழ் 09

# வலு

ஜனவரி - மார்ச் 2016

**மாற்றுத்திறனாளிகள் தொடர்பான தகவல்களையும் ஆக்கங்களையும் தாங்கி வெளிவரும் காலாண்டு சஞ்சிகை**


பிரதம ஆசிரியர்

**திரு.க.தர்மசேகரம்**

**ஆசிரியர் குழு**

திரு.நா.கீதாகிருஷ்ணன்
திரு.செ.பிரிந்தாபரன்
திரு.செ.சசிராஜ்
செல்வி.ப.சங்கீர்தா

**இதழ்க்குழு ஆலோசகர்**

திரு.மு.பாலசுப்பிரமணியம் (M.Phill)



வெளியீடு

**கருவி**

மாற்றுத்திறனாளிகளின் சமூகவள நிலையம்,
இல.1166/15, அருளம்பலம் வீதி,
நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.
021 205 4224

Email:
karuvi.org@gmail.com
web: karuvi.org


**பொருளடக்கம்**


1. சிந்திக்கும் தருணம் -------------- 02
2. விழிப்புலன் மாற்றாற்றல் உடையோரின் வாழ்வில் தகவல் தொழில் நுட்பத்தின் பங்கு ---- 03
3. வலிகளை உரமாக்கி எழுந்த உலக விருட்சங்கள் --------------- 06
4. மாற்றுத்திறனாளிகளின் உரிமை,பாதுகாப்பு மற்றும் சவால்கள் ---------- ----------------08
5. செய்திச் சாரளம் ----------------- 13
6. தசரசம் ------------------------------ 15
7. சிறுகதை --------------------------- 24
8. முற்றத்து மல்லிகை -------------- 26
9. வலுவிடம் கேழுங்கள் --------- 32
10. எண்ணக்கிண்ணம் --------------- 32
11. வலு தரும் ஜோதிடம் ------------33
12. எழுதுங்கள் வெல்லுங்கள் ---- 35



தொடர்புகளுக்கு:
நா.கீதாகிருஷ்ணன் - 0766385563

# முத்துக் குளிப்பது யார்....?



**ஆசிரியர் தலையங்கம்**

வலுவிழப்புடன் கூடிய நபர்கள் எதிர் கொள்கின்ற வாழ்வியல் மற்றும் சமூக பொருளாதார நெருக்கடிகள் உரிய முறையில் கவனத்தில் எடுக்கப்படாத நிலை எமது சமூகத்திலும் ஒட்டு மொத்த நாட்டிலும் இருப்பது ஓர் துர்பாக்கியமான சூழமைவாகவே காணப்படுகின்றது.

இலகுவில் பாதிப்படையக் கூடிய குழுவாக மாற்றுத்திறனாளிகளும் இருக்கின்றனர் என்பதை அநேகர் பல சந்தர்ப்பங்களில் மறந்து விடுகின்றனர். இப்பொழுது எமது நாட்டில் பொது இடங்களில் கூட பொருத்தமான அணுகு வசதிகள் வலு இழந்தவர்களுக்காக ஏற் படுத்தப்படாமலே இருக்கின்றது. பல சவால்களுக்கு மத்தியில் கல்வி பயின்று தம்மை நிலை நிறுத்த முயல்கின்ற மாற்றுத்திறனாளிகள் வேலைவாய்ப்பை பெறமுடியாத நிலையும், பொருத் தமான வேலைகள் வழங்கப்படாத நிலையும் தொடர்ந்த வண்ணமாகவே இருக்கின்றது.

அடிப்படை சுகாதாரம், போக்குவரத்து வசதிகள், பொருளாதாரம், கல்வி, பண்பாட்டு பின் புலங்கள் எனப் பல தளங்களிலும் மாற்றுத்திறனாளிகள் பலத்த சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டியவர்களாகவே இருக்கின்றனர்.

இந்தக் குறிப்பில் முழுமையாக அவற்றை வெளிக் கொண்டு வருவதென்பது சாத்தி யமற்றது. அரசியல், பொருளாதாரம் சார் கொள்கை வகுப்பவர்கள் மாற்றுத்திறனாளிகளின் பிரச்சனைகளை உள்வாங்கி கொள்கை ரீதியான தீர்மான முன் வைப்புக்களை அரசமட்டத்தில் மேற்கொள்கின்ற பொழுதே இவர்களது வாழ்வில் படிப்படியான மாற்றங்கள் ஏற்பட வாய்ப்பு உருவாகும் என நாம் நம்பலாம்.

நன்றி

**பிரதம ஆசிரியர்**
**திரு.க.தர்மசேகரம்**

*மலர்ந்துள்ள ஈராயிரத்து பதினாறு வலு வாசகர்கள் அனைவரது வாழ்விலும் வளமும் நலமும் செழிக்கும் ஆண்டாக அமைய வலு தனது மகிழ்வான வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றது. இவ் ஆண்டு முதல் பல வாசகர்களின் வேண்டுகையினை ஏற்று வலு 36 பக்கங்களுடன் உங்கள் கரங்களில் தவழ்கின்றது. வலு வாசகர்கள் வலுவிற்கு வழங்குகின்ற வலுவான ஆதரவு எம்மை வலுப்படுத்துவதாய் அமைகிறது. மூன்றாவது அகவை கால்பதிக்கும் வலு புதிய தரமான அம்சங்களோடு உங்களை தேடி நாடி வருகின்றது.*



சி.பிரதீபன்

விழிப்புலன் மாற்றாற்றல் உடையோருக்கு பயன்படும் சில மென் பொருட்களுக்கான நிறுவல் முறைகளும் அவற்றை பயன்படுத்தும் முறைகளும்

# விழிப்புலன் மாற்றாற்றல் உடையோரின் வாழ்வில் தகவல் தொழில்நுட்பத்தின் பங்கு

**01. Jaws 10.0 மென்பொருளை நிறுவுதல்**

எங்களுக்கு பொதுவாக Jaws மென்பொருளில் Crack வெளியீட்டையே பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருப்பதால் அதனை எவ்வாறு கணினியில் நிறுவுவது (install) என்பதை பார்ப்போம். கணினியில் வேறு எந்த திரைப் படிப்பானும் (Screen reader) இல்லாத நிலையில் வின்டோஸ் இயங்கு தளத்துடன் வருகின்ற Narrator எனும் திரைப்படிப்பானின் உதவியுடன் Jaws மென்பொருளை கணினியில் நிறுவ முடியும். Narrator திரைப்படிப்பானை கதைக்க வைப்பதற்கு எழுத்தை Windows key +U அழுத் துங்கள்.

1. முதலில் Jaws 10.0 என்பதில் Enter
2. பின் arrow key மூலம் j10.0 512 என்ற இடத்தில் enter
3. Tab key மூலம் next and enter
4. மீண்டும் Next என வந்தால் அதில் enter
5. Tab key மூலம் I accept என்ற இடத்துக்கு வந்து space bar மூலம் enter
6. Tab key மூலம் next என்ற இடத்துக்கு வந்து enter
7. Tab key மூலம் Typical என்ற இடத்துக்கு வந்து enter
8. Tab Key மூலம் install என்ற இடத்துக்கு வந்து enter அப்போது Jaws 10.0 மென் பொருளானது install செய்யத் தொடங் கும்.
9. Install செய்து முடிந்ததும் Tab Key மூலம் finish என்ற இடத்துக்கு வந்து enter
10. மீண்டும் Jaws 10.0 என்ற இடத்திற்கு சென்று enter அதிலே jaws 10 crack 512 என்பதில் enter அங்கே காணப்படும் இரு கோவைகளையும் copy செய்து கொள்ளுங்கள்.
11. Crack file களை Paste செய்யும் போது jaws ஆனது off நிலையில் இருத்தல் வேண்டும். Jaws மென்பொருளை மூடு வதற்கு insert key உடன் function key - 4 அழுத்தி tab key மூலம் yes buttion என்ற இடத்தில் enter. இதனை தொடர்ந்து Norrator திரைப்படிப்பானின் உதவி

யுடன் கீழ்குறிப்பிட்ட நிறுவல் முறை களை செய்யுங்கள்.

12. My computer or computer என்பதற்கு வந்து enter

13. அதிலே வன்தட்டு C (hard disk c) என்ற இடத்தில் enter

14. அங்கு program files என்பதில் enter செய்து பின் freedom scientific என்ற இடத்திற்கு arrow key மூலம் வந்து jaws என்ற இடத்தில் enter

15. Arrow key மூலம் jaws 10 என்பதை தெரிவு செய்து enter

16. அதிலே நீங்கள் copy செய்து வைத் திருக்கும் file ஐ Paste செய்யுங்கள். அப்போது கணினி ஏற்கனவே அந்த file இருக்கின்றது என்று கூறும் . நீங்கள் down arrow key மூலம் yes to all என்ற இடத்திற்கு வந்து enter செய் யுங்கள். இப்போது jaws மென்பொருள் முழுநேரமும் வேலை செய்யும்.

குறிப்பு - Jaws 10.0 crack மென்பொருள் xp வகை இயங்கு தளத்தையுடைய கணினிக்கு மாத்திரமே முழு நேரமாகச் செயற்படும். Windows 7 இயங்கு தளம் உடைய கணினிக்கு jaws v11.0 1447 32 bit மென்பொருள் முழுநேரமாக செயற்படும். ஆயினும் இதற்கு நாங்கள் Control panel பகுதியை திறந்து . அதில். Action Center என்பதை தெரிவு செய்து அதில் Change user Account Control Setting என்பதை தெரிவு செய்து. அதனை Turn UAC off எனும் நிலையில் விட வேண்டும்.

## JAWS general short cut keys

1. Go to start menu
   Ctrl + escape, press windows key
2. Go to desktop
   Press windows + d, press windows + m

## 02. NVDA மென்பொருளை கணினியில் நிறுவும் முறை

1. முதலில் NVDA என்ற இடத்தில் enter செய் யுங்கள் அப்போது nvda சத்தம் ஒன்றை எழுப்பிய சிறிது நேரத்தில் கதைக்க ஆரம்பிக்கும்.

2. Tab key மூலம் next என்ற இடத்திற்கு வந்து enter

3. Tab key மூலம் I agree என்ற இடத்திற்கு வந்து Space bar மூலம் Enter செய்யுங்கள்

4. Tab key மூலம் next என்ற இடத்துக்கு வந்து enter செய்யுங்கள்

5. Tab key மூலம் Install button என்ற இடத்திற்கு வந்து Enter செய்யுங்கள்

6. அப்போது nvda சத்தம் எழும்பிக்கொண்டு install செய்யத் தொடங்கும்

7. அதன்பின் Tab key மூலம் Finish என்ற இடத்திற்கு வந்து Enter

## NVDA சுருக்க வழிமுறைகள் (General nvda short cut keys)

1. NVDA மெனுவிற்கு செல்ல Insert + N
2. NVDA கதைப்பதை நிறுத்துவதற்கு Control key அழுத்துங்கள்

3. To close the NVDA Insert key +Q

4. Insert key யை அழுத்திக் கொண்டு S எழுத்தை மாறி மாறி அழுத்துவதன் மூலம் nvda மூன்று நிலைக்குமாறும்

- முற்றாக கதைக்காத நிலை (Speech mode off)

- பீப் ஒலி மாத்திரம் வரும் (Speech mode beep)

- கதைக்கும் நிலை (Speech mode on)

5. கணினியில் நாம் எதில் நிற்கிறோம் என்பதை அறிந்து கொள்வதற்கு Insert key +t

6. Insert key+ U எழுத்தை அழுத்துவதன் மூலம் ஏற்படும் மாற்றங்கள்

7. கணினியில் பிரதி செய்யப்படும் வீதத்தை கூறுவது (speech progress bar update)

8. கணினியில் பிரதி அல்லது பதிவு இறக்கப்படும் விதத்தை கூறுவது (Speech progress bar update)

9. கணினியில் பிரதி அல்லது பதிவு இறக்கப்படும் வீதத்தை பீப் ஒலியில் தரும் (beep for progressbar update)

10. கணினியில் பிரதி அல்லது பதிவு இறக்கப்படும் வீதத்தை பீப் ஒலி மற்றும் கதையுடன் தரும். (beep and speech progressbar update)

11. நேரத்தை அறிந்துகொள்ள insert key +F12 விசையை ஒரு தடவை அழுத்துங்கள்

12. திகதி அறிந்து கொள்ள Insert key உடன் f12 விசையை இருதடவை வேகமாக அழுத்துங்கள்

13. Nvda தமிழ் மொழியில் வாசிக்க வேண்டும் ஆயின் insert key +ctrl key + V எழுத்தை அழுத்துங்கள் பின் T எழுத்தை அழுத்துவதன் மூலம் மொழியை தெரிவு செய்து Enter key ஐ அழுத்துங்கள்.

14. கணினி இயங்கத் தொடங்கும் போது nvda கதைக்க வேண்டுமாயின் Insert key +N எழுத்தை அழுத்துங்கள் பின் கீழ் அம்புக்குறி மூலம் Preferences sub menu என்ற இடத்தில் Enter செய்து Tab key மூலம் Automatic start என்ற இடத்திற்கு வந்து space bar மூலம் check செய்த பின் tab key மூலம் Ok button என்ற இடத்திற்கு வந்து enter செய்யுங்கள்.

(தொடரும்)



# வலிகளை உரமாக்கி எழுந்த உலக விருட்சங்கள்

நா. கீதாகிருஷ்ணன்,
நயினாதீவு.

## தடைகள் தகர்த்த நடிகை



ஆயகலைகள் 64 என்பர் இக் கலைகளில் அனேகமானவை இந்தியா விலே தோற்றம் பெற்று வளர்ச்சி அடைந்து உயர் நிலை அடைந்துள்ளன. இவற்றுள் பரதநாட்டிய கலை சைவத்தையும் தமிழையும் தழுவிய வகையிலே காணப் படுகின்றது. இக் கலையினை பயின்று பலர் உலக பிரபலங்களாக திகழ்ந்துள் ளனர். இவ்வாறான ஒருவராக விளங்கி யவர் தான் சுதாசந்திரன்

## சுதாச்சந்திரன் Sudha Chandran

1963 ம் ஆண்டு புரட்டாதி மாதம் 21 ம் திகதி இந்தியாவின் மும்பை நகரில் சுதாச்சந்திரன் பிறந் தார். சிறுவயதிலே கல்வியிலும் பரதநாட்டிய கலை யிலும் இவர் சிறந்து விளங்கினார். மும்பாயில் நித் பாய் கல்லூரியில் B.A பட்டப்படிப்பினையும் பின்னர் M.A பொருளாதாரவியல் போன்ற துறைசார் கல்வி களையும் பயின்று தேர்ச்சி அடைந்தார்.

1981 ம் ஆண்டு புனித யாத்திரை மேற்கொண்ட பொழுது திருச்சிராப்பள்ளி அருகே இவர் பயணம் செய்த வாகனம் விபத்துக்குள்ளானது. இந்த விபத் தில் இவர் ஒரு காலை இழந்தார் பின்னர் ஜெயப்பூர் செயற்கை கால் இவருக்கு பொருத்தப்பட்டது. இக் காலுடன் முதலில் நடக்க கற்றுக்கொண்ட இவர் பின் னர் நடனத்தினையும் தன் விடாமுயற்சியால் கற்றுத் தேர்ந்தார்.

இவர் இந்தியாவில் மட்டுமன்றி ஐரோப்பா, கனடா மற்றும் மத்தியகிழக்காசியா போன்ற நாடுகளுக்கும் சென்று நடன நிகழ்ச்சிகளை நடாத்தி உள்ளார். இதன் மூலம் பல ரசிகர்களை கொண்டவர்களுள் ஒருவராக இவர் விளங்குகின்றார்.

இவரது வாழ்க்கையில் விதி விளையாடிய பொழு தும் மதியை இழக்காது தன்னம்பிக்கையுடன் தனது

வாழ்க்கையை வெற்றி கொண்டுள்ளார். நடனக் கலைஞர்களுக்கு கால் இழப்பு ஏற்படுவது என்பது அவர்களது கலைக்கு முற்றுப் புள்ளி வைப்பதாகவே அமைந்து விடுகிறது. ஆனால் இவரது தன்னம்பிக்கை இவரது நடனக்கலையை இன்றும் வாழ்வித்துக் கொண்டிருக்கின்றது.



திரைப்படத்துறையிலும் தொடர் நாடகத் துறையிலும் கால்பதித்த இவர் இன்றும் பலராலும் அறியப்பட்ட ஒருவராக விளங்குகின்றார். 1984 ம் ஆண்டு வெளிவந்த மயூரி என்ற தெலுங்குத் திரைப்படத்தில் கதாநாயகியாக இவர் நடித்துள்ளார். இத் திரைப் படத்திற்காக 1986 ம் ஆண்டு தேசிய திரைப்பட விருதுகளில் சிறப்பு விருதை இவர் பெற்றுள்ளார்.

தமிழில் விசால் நடித்த சத்தியம் மற்றும் ஆதிபகவன் உட்பட பல்வேறு படங்களில் இவர் நடித்துள்ளார். இது தவிரபல சின்னத் திரைகளிலும் நடித்து வருகின்றார்.

ஓவியனுக்கு கண்ணும், இசையமைப் பாளனுக்கு செவியும் நடனக் கலைஞனுக்கு காலும் மிகமிக முக்கியம் ஆகின்றது. ஒருவர் இக் கலைத்துறைகளில் உயர்ந்த நிலையை அடையும் போது உலகப்புகழ் பெற்ற ஒருவராக திகழ்கின்றார்.ஆனால் இவ்வேளையில் ஏற்படுகின்ற குறித்த அங்க இழப்பானது அவர்கள் சார் துறைக்கு முற்றுப்புள்ளி வைப்பதோடு மனதினையும் சற்று தடுமாற வைத்து விடுகிறது.இவ்வாறான நிலைகளில் பலர் தமது வாழ்க்கை முடிந்து விட்டதாக எண்ணி முடங்கிவிடுகின்றனர்.ஆனால் ஒரு சிலர் மட்டுமே இந்த வலிகளை எல்லாம் உரமாக்கி உலக விருட்சங்களாய் திகழ்கின்றனர்.இந்த வகையில் சுதா சந்திரனும் ஒரு பரத நாட்டிய கலைஞராக இருந்து காலை இழந்த வேளையிலும் மன வலிமையுடன் அத்துறையில் முன்னேறி உலகம் வியக்கும் நடனக் கலைஞராக இன்றும் திகழ்கின்றார். இவரது வாழ்க்கை பலரது வாழ்வின் வெற்றிக்கு பாடம் சொல்லும் ஒரு புத்தகமாக அமையும் எனக் கருதுகின்றேன்.





# மாற்றுத்திறனாளிகளின் உரிமை,பாதுகாப்பு மற்றும் சவால்கள்

## ஆக்கத் திறன் போட்டிகள் 2015


## சுப்பிரமணியம் சிவராசா


**உலகில் உயிர்வாழுகின்ற வளமான மொழிகளில் இருக்கின்ற இலக்கியங்களை எடுத்து நோக்கினால் அவை எல்லாமே போர்க்களையும் அதன் அவலங்களையும் பாடியிருப்பதை காணலாம்.அதன் மூலமாக சமூகத்திற்கு சொல்ல வேண்டியதை சொல்கிற உத்தியை புலவர்கள் கையாண்டார்கள்.நாம் வாழும் உலகம் இரண்டு மகா யுத்தங்களை கண்டிருக்கிறது.ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்ட இரண்டாவது உலக யுத்தம் தோற்றுவித்த அவலங்கள் இனி ஒரு மகா யுத்தம் வேண்டவே வேண்டாம் என்று எல்லோரையும் சிந்திக்க வைத்தது**

1945ல் ஐந்து ஆண்டுகள் நீடித்து முடிவடைந்த உலக யுத்தத்தின் இன்னொரு அவலமாக ஏராள மானவர்கள் ஊனமுற்றவர்கள் ஆயினர். பெண்கள், சிறுவர்கள் முதலியோரும் பாதிக்கப்பட்டனர். இதுவே ஊனமுற்றவர்கள் பற்றிய சிந்தனை கதவுகளை திறப்பதற்கு காரணமாயிற்று. 1948 ல் ஐ.நா. சபை யின் UNHCR அமையம் இது பற்றி ஆராய்ந்தது. 1952 ல் ஒரு சட்ட வரைவும் U.N Convention ஆல் வெளி யிடப்பட்டது.

இயலாமையுடன் கூடிய நபர்களின் P.W.D உரிமைகளும் பாதுகாப்பும் தொடர்பில் ஐம்பது விடயங்கள் ஐந்து தலைப்புக்களின் கீழ் சொல் லப்பட்டது. 1978 ல் இலங்கையில் இது அறிமுகமாகி நாட்டின் அரசியல் அமைப்பில் எட்டாவது திருத்தச் சட்டமாகவும் வரையப்பட்டது. கொள்கையளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டாலும் இதுவரையில் Bill மசோ தாவாக நிறைவேற்றப்படவில்லை. இப்படியான நலத்திட்டங்கள் வரும்போது கடன் சுமை காரண மாக திறைசேரி கையை விரித்துவிடுவது வழக் கமான ஒன்றாக இருக்கிறது.

1986 ல் இலங்கையில் போர் முனைப்பு வீச்சாக இருந்ததால் ஊனமுற்றோர் பற்றி அரசியல் மட்டத்தி

லும் பேசப்பட்டது. அதன் பின்னர் 1996 இல் இருந்து ஊனமுற்றோர் தினம் பரவலாக அனுஸ்டிக்கப்பட தொடங்கியது. 2004 இல் ஊனமுற்றோருக்கான ஜனாதிபதியின் விசேடமான அமையம் ஒன்று உருவாக்கப்பட்டு ஊனமுற்றோரின் நலன்களில் அக்கறை காட்டப்பட வேண்டுமென்று வலியுறுத்தப்பட்டது. இன்று ஊனமுற்றோரின் உரிமைகளும் பாதுகாப்பும் பற்றிய சிந்தனைகள் இன்னுமொரு பரிமானத்தை எட்டியிருக்கின்றன.

தெற்காசிய நாடுகளின் பாராளுமன்ற தலைவர்கள் ஒக்டோபர் 2015 முற்பகுதியில் இலங்கையில் ஒரு கருத்தரங்கை நடத்தினர். அதை தொடர்ந்து சார்க் நாடுகளின் தேர்தல் அதிகாரிகளும் (Election commision) இலங்கையின் 22 மாவட்டச் செயலக தேர்தல் ஆணையாளர்கள் கலந்து கொண்ட ஒரு கூட்டமும் நடைபெற்றது. UNCRDP எனும் ஐ.நா வின் ஊனமுற்றோருக்கான உரிமைகள் சமவாயத்தின் பரிந்துரையின் படி இயலாமையுடன் கூடிய நபர்களை உள்வாங்கிய அரசியல் பங்குபற்றல் என்றபுதியசிந்தனைஆராயப்பட்டுள்ளது. இது பற்றி எமது தேர்தல் கமிஷன் அறிக்கையும் வெளியிடப்பட்டுள்ளது.

ஊனமுற்றோரின் உரிமைகளும் பாதுகாப்பும் என்ற விடயம் அரசியல் பங்குபற்றல் என்ற அளவுக்கு உலகளாவிய ரீதியில் விழிப்புணர்வை பெற்றுள்ளது. ஆனால் நமது நாட்டில் நிலைமை எவ்வளவுக்கு முன்நோக்கி நகர்ந்திருக்கிறது என்பது கவலையளிப்பதாகவே தெரிகிறது. அதில் இன்னுமொரு விடயம் தெளிவற்றதாக இருக்கிறது. இந்த மாற்றுத்திறனாளர் என அழைக்கப்படுகிறவர்கள் யார்? என்பதற்கு வரைவிலக்கணம் சொல்வது கடினமாகும் எவ்வாறாயினும், சாதாரண மனிதசார் இயங்கு நிலையிலிருந்து வேறுபட்ட நிலைமையை நாம் மாற்றுதிறனாளராக அடையாளம் காணலாம் என்பது கலாநிதி. ந. ரவீந்திரகுமாரன் (கொழும்பு பல்கலைக்கழகம்) அவர்களின் கருத்தாக வாழ்வின் திருப்பம் என்ற நூலில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இயலாமையுடன் கூடிய நபர் என்பதை ஐ.நா சமவாயத்தின் வரைபு இப்படி சொல்கிறது. தமது அலுவல்களை தாமாகவே செய்வதில் இடர்பாடுகள் உடையவரும் அந்த இடர்பாட்டினால் நிரந்தர பாதிப்புக்குள்ளான வரும் இயலாமையுடன் கூடிய நபர்கள் ஆவார்.

இனி இயலாமை ஒருவருக்கு எப்படி ஏற்படுகிறது எனப் பார்க்கலாம்.புலன் உறுப்புக்கள் செயற்குறைபாடு, அங்க அசைவு செயற்குறைபாடு, அறிவியல் சார்குறைபாடு மற்றும் மாறாத நோய்களால் வருவது பிறப்பு மற்றும் விபத்துக்கள் என்பன குறைபாட்டு காரணிகளாக அறியப்பட்டுள்ளன. முன்னர் சொன்னவாறு நிரந்தரமாக இயலாமை இருக்கும் போது ஒரு நபர் ஊனமுற்றவர் ஆவார். மருத்துவ மதிப்பீட்டின் படி 40 வீத இயலாமை இருந்தால் அவர் குறை பாடுடையவராக சான்றிதழ் பெறத்தக்கவர். பெறுதற்கரிய மனிதப் பிறவியில் "கூன் , குருடு, செவிடு, பேடு நீங்கி பிறத்தல் அரிது" என ஔவை சொல்லுகிறாள். இதை வெற்றி கொள்ள ஒரு உபாயம் வள்ளுவரிடம் இருக்கிறது.

"பொறியின்மை யார்க்கும் பழியன்று
அறிவறிந்த ஆழ் வினையின்மை பழி"

அதாவது "செயலற்று சோம்பிக்கிடப்பவன் வெற்றி பெற மாட்டான்." என்பது பொருள்.

"எழுமின் விழி மின் வெற்றி பெறும் வரை தொடர்ந்து முயற்சி செய்மின்" என்கிறார்.

சுவாமி விவேகானந்தர். இப்படியாக முயற்சி செய்து வெற்றி பெறுபவர்கள் மிகக்குறை வானவராகவே இருக்கின்றனர். இலங்கை யில் சராசரியாக 12 இலட்சம் மாற்றுத்திறனா ளர் இருப்பதாக ஒரு கணக்கெடுப்பு உள்ளது. இவர்களில் கடந்த பாராளுமன்ற தேர்தலில் 50,000 பேர் கூட வாக்களிக்கவில்லை என்பது இவர்களின் மனச்சோர்வையே காட்டுகிறது. உண்மையிலே இவர்களிடையே பாராளு மன்ற உறுப்பினர்களை வெற்றி கொள்ள செய்து உரிமைகளுக்காக பேரம் பேசும் வாக்கு வாங்கி இருப்பதை அறியாமல் இருக் கிறார்கள். இன்னும் இவர்களுடைய வாழ்க்கை அல்லது சீவனோபாயம் பற்றி நோக்கும் போது இவர்களின் செயற்பாட்டுத் திறனின்மை தெட்டத்தெளிவாகத் தெரிகிறது.

குறைபாடுகளில் தர நிர்ணயம் ஒன்று பின்பற்றப்படுகிறது. பாதிப்புக்குள்ளானவர் (Impairment), இயலாதவர் (Disable), ஊனமுற்றவர் (Handicap) என மூன்று வகையினராக பிரிக்கப் பட்டுள்ளது. ஊனமுற்றோர் தவிர ஏனையோர் நிரந்தர பாதிப்புக்கு உள்ளானவர் அல்லர். இவர்கள் உதவிகருவிகள் (Suportive tools) துணை கொண்டு தமது வேலைகளை செய்ய முடியும். ஊன்றுகோல் (Callper) வெண்பிரம்பு (White cane) மூன்று சக்கர சைக்கிள் (Tricycle)சக்கர நாற்காலி ,செயற்கை உறுப்புக்கள் போன்ற பல உதவி கருவிகள் மற்றும் நவீன தொழில்நுட்பங்களுடன் கூடிய கருவிகளும் இவர்களுக்கு கிடைக்கின்றன.

இவர்களின் கல்வி, தொழிற்பயிற்சி, வாழ் வாதாரம் என்பவற்றிக்கு உதவ தொண்டு நிறுவனங்களும் நலன் விரும்பிகளும் காத்தி ருக்கிறார்கள். பார்வையற்றோருக்கு கணனி வசதி, எழுத்து இயந்திரம் (writer) ப்ரேயில் மட்டுமன்றி தங்கியிருந்து கல்வி கற்கும் வசதிகளும் உண்டு. பூட்டிய கதவுகளுக்குள் முடங்கிக் கிடக்காமல் இவர்களை வெளியே கொண்டு வருவது இன்றும் பெரும்பாடாகவே இருக்கிறது. இவர்கள் தமது வாழ்க்கையை 3 வழிகளில் ஓட்டிச் செல்பவராய் இருக்கிறார் கள். தங்கி வாழ்பவர் (Dependent) கருணையா சகர்கள் (Charity seekers) சமூகத்தில் சேர்ந்தவர் கள் (Social class) என இவ்வகைகள் பெயரிடப் பட்டுள்ளன.

“வெந்ததை தின்று விதி வந்தால் சாவோம்” என இருப்பவர் தங்கிவாழ்பவர். தமது குறை பாட்டை சொல்லி யாசகம் பெறுபவர், இரண் டாம் வகையினர். தமது முயற்சியால் ஏனைய குடிமக்களோடு சமமாக வாழவேண்டும் என்று போராடி வாழ்பவர் மூன்றாவது வகை யினர். இந்த மூன்றாம் வகையினரைப் பற்றியே சமூகம் அக்கறைப்பட வேண்டும் என்று குரல் எழுப்பப் படுகிறது. நீ குரல் கொடுக்காமல் ஊமையாக இருக்கும் வரை உலகம் செவி டாகவே இருக் கப்போகிறது என்கிறார் புரட்சித் தலைவர் சே.குவேரா.

இன்று ஊனமுற்றோர்கள் கல்வி தொடக் கம் அனைத்து செயற்பாடுகளிலும் உள்வாங் கப்படுகின்றனர் (Inclusive). இவர்கள் மற்றவரோடு சேர்ந்து செயலாற்றும் போது விழிப்புணர்வு (Awareness) பிரசாரங்கள் இன்றியே தானாக ஊட்டப்படுகிறது எல்லா ஊடகங்களும் (Media) நவீன கணினி, முகநூல், இணையம் போன் றவையும் தமது பங்களிப்பை செய்கின்றன. ஆனால் சினிமா மட்டும் நகைச் சுவையாகவே காட்டிக்கொண்டிருப்பது உறுத் தலாகவே உள் ளது. வலுவிழந்தோர் பற்றிய நூல்கள் அதிக மாக வருவதில்லை .

UNHCR இயலாமையுடன் கூடிய நபர்களின் உரிமைகள் மற்றும் பாதுகாப்புக்கட்டாயம்

(CRDP), கையேடுகளையும் நூல்களையும் வெளியிடுகிறார்கள். ஹெலன் கெல்லரின் 'எனது வாழ்வின் கதை', மில்ட்டரின் 'தொலைந்து போன சொர்க்கம்' பீத்தோவானின் 'தொகுப்பிசை சுரங்கள்' போன்ற சிலவற்றை தவிர மிகக்கு றைவான நூல்களே வந்திருக்கிறது A.K. ரோலென்டின் ஹரிப் பொட்டரில் வருகிற சில கதாபாத்திரங்களை இந்த வகையில் சேர்த்துக் கொள்ளலாமா? எனவும் நான் சிந்தித்ததுண்டு.

தமிழில் புலம் பெயர்ந்தோர்இலக்கியம் ஒன்று வளர்ந்து வருவதை போல் மாற்றுத்திறனாளர் இலக்கியம் ஒன்றும் வர வேண்டும் என்று விரும்புவதில் தவறில்லை என நினைக்கிறேன். நமது நாட்டில் கல்வியால் உயர்ந்த வெற்றியாளர்களின் நீண்ட பட்டியல் ஒன்று இருக்கிறது. நீதியரசர் ,வக்கீல் ,நொத்தாரிசு , வைத்தயகலாநிதி, விரிவுரையாளர், ஆசிரியர், அரச சேவை முதலான பலதுறைகளில் ஓரிருவர் பதிவாகி யுள்ளனர். தற்போது யாழ் மருத்துவக் கல்லூ ரியில் மாணவர் ஒருவர் இறுதியாண் டில் பயிலுகிறார், பார்வையற்ற ஒருவர் SLAS நிர் வாக சேவையில் இருந்து தற்போது கனடா வில் வங்கியாளராக இருக்கிறார். வெளி நாடுகளிலும் உயர் பதவிகளில் சிலர் இருக்கி றார்கள். சக்கரைப் பொங்கலில் ஒரு சில முந்திரிப்பருப்புக்கள் உதாரணங்கள் காட்ட மட்டுமே பயன்படும் முழு சமூகத்திற்குமான பாதுகாப்பும் உரிமைகளுமே எவ்வாறு நடை முறைப்படுத்தப்படலாம் என்பதே சிந்தனைக் கும் விமர்சனத்திற்கும் உரியதாக இருக்கி றது.

சகல துறைகள் எனச் சொல்லும் போது விளையாட்டும் ஏனைய கலைகளும் கூட சேர்க்கப்படுகிறது. லொஸ்ஏஞ்சலில் இம்முறை நடந்த பரா ஒலிம்பிக் மாற்றுத் திறனாளிகளுக்கான போட்டிகளில் சிவபூமி மனவளர்ச்சி குன்றியோர் பாடசாலை மாணவர் இருவர் பதக்கங்களை வென்று சாதனை படைத்துள்ளார்கள் . துடுப்பாட்டம், மலையேற்றம், சதுரங்கம் போன்ற பல விளையாட்டுகளிலும் ஊனமுற்றோர் சிறப்பாக செயற்பட்டு வருகின்றனர். "கனவு மெய்ப்பட வேண்டும், எண்ணியது கைப்பட வேண்டும்" என்கிறான் பாரதி. "தூக்கத்தில் கனவு காணாமல் விழிப்பு நிலையில் காணும் கனவு உன்னை சாதனையாளனாக்கும்" என் கிறார் அப்துல்கலாம். "முடியாது என்பதை உனது அகராதியிலிருந்து நீக்கிவிடு" என்கி றான் நெப்போலியன் உலகின் வெற்றியா ளர்கள் எல்லாம் அடிமட்டத்தில் இருந்து தோல் விகளை படிக்கட்டுகளாக்கி வெற்றிக் கனியை பறித்தவர்கள் என்பதே வரலாறாக இருக் கிறது. "தேம்பி அழும் குழந்தை, நீ திடம் கொண்டு போராடு பாப்பா" என்கிறார் பாரதி.

மாற்றுத்திறனாளர் சமூகம் முகம் கொடுக்கும் சவால்கள் ஏராளம் அதிலே அவமானம், தோல்வி ,பரிதவிப்பு என்பனவே சகவாசம் பட்டதுயரில் பாதி மீண்டாலே விட்டது நோயென்று மகிழ்ந்து கொள்வோம். விட்ட மீதியோடு வாழ்வது தான் வாழ்க்கை.

இன்று எல்லோரும் அவசர உலகில் வாழ்வதாக சொல்கிறார்கள். அதனால் மன அழுத்தம், இதய நோய்கள், அன்புக்கான ஏக்கம் போன்ற பல பிரச்சனைகளால் சிறுவர் முதியோர் உட்பட சகலரும் பாதிக்கப்படு கிறார்கள். இது மருந்து மாத்திரைகளால் முற்றாக தீர்க்கப்படுவது ஒன்றல்ல சமூகம் எனும் போது அதன் குடித்தொகையில் ஊன முற்றவர்களும் சேர்த்தே எண்ணப்படுகிறார் கள். எனவே அவர்களும் தமது பிரச்சனை களை இவர்களோடு சேர்த்து பரிகாரம் தேடிக்

கொள்ள இயலும்.

***" நோய்நாடி நோய் முதல்நாடி அதன் வாய் நாடி வாய்ப்பச் செயல்"***

வட்டப் பாதையில் சுழலும் உலகம் விட்டு விலத்திய இடத்தை மீண்டும் தொட்டுக்கொள்வது வியப்பல்ல ஆன்மீகம், தியானம், யோகா போன்றவைகள் இன்றைய பிரச்சினைகளுக்கும் தீர்வாக அறியப்பட்டுள்ளன. எளிதில் எல்லாப் பிரச்சினைகளுக்கும் ஆளாகக் கூடிய (Volnarable group) ஊனமற்ற சமூகத்தினருக்கும் இது மிக உதவியாக இருக்கும் .

***ஆணும் பெண்ணும் நிகரெனவே கொள்வதால் அடிமை நீங்கி இவ் வையம் தழைக்குமா......***

***(பாரதியார்)***

***ஆடிப்பாடி வேலை செய்தால் அலுப்பிருக்காது ஆணும் பெண்ணும் சேராவிட்டால் அழகிருக்காது***

***( உடுமலை நாராயணகவி)***

ஆணோ பெண்ணோ , ஊனமுற்றவருக்கு திருமண வாழ்க்கை எட்டா கனியாகவே இருக்கிறது. ஒரு சில உழைத்து பிழைக்கக்கூடிய ஆண்களுக்கு அதிஸ்டம் அரிதாக வருகிறது. ஆனால் பெண்களுக்கோ அதுவும் சாத்தியமில்லை ஊனமுற்ற ஆணும் பெண்ணும் சேர்ந்து வாழ்வது மிகவும் கடினம் இது ஊக்குவிக்கப்படுவதும் இல்லை ஆனால் பேச்சு, செவிப்புலன் குறைந்தவர்களை பொறுத்த வரையில் சாத்தியமானதே மேலும் வயதாகும் போது இவர்களின் நிலைமை மிகவும் கவலையளிப்பதாகவே உள்ளது. இதற்கான தீர்வுகள் நமது நாட்டில் இன்னும் இல்லை . அரசினூடாக வழங்கப்படும் உதவித் திட்டங்கள் பற்றிய தகவல்கள் ஊனமுற்றவரை சரியாக சென்று சேர்வதில்லை. இவர்களின் எண்ணிக்கை பதிவுகள் கூட (Data report ) மாவட்ட மட்டத்திலோ சமூக மட்டத்திலோ சரியாக கிடைப்பதில்லை.

இன்னும் சில விடயங்கள் உண்டு வங்கிகளின் வரப்பிரசாதங்கள், கடனட்டைகள், ATM அட்டைகள் மறுக்கப்படுகின்றன. காப்புறுதிகளும் வழங்கப்படுவதில்லை, போக்குவரத்திலும் புறக்கணிப்பு, பொது இடங்கள் , அலுவலகங்கள் வங்கிகளில் இன்னமும் இயலாமை, ஈவு வசதிகள் (Disable access) சரியாக இல்லை நிலைமை இப்படியிருக்க இவர்கள் வாழிடங்களிலும் இந்த ஈவு இருக்க வேண்டும் என்றும் சொல்கிறார்கள். இதற்கு மேல் இன்னும் விரிவுபடுத்தாமல் நிறுத்தி ஊனமுற்றவரின் ஒளிமயமான எதிர்காலம் இன்னும் எவ்வளவு தூரத்தில் என்ற ஏக்கத்துடன் இறைவனை பிரார்த்திப்போம்.




### விசேட தேவையுடைய 29 குழந்தைகளை தத்தெடுத்து வளர்க்கும் அமெரிக்க தம்பதிகள்

அமெரிக்காவில் ஒரு தம்பதியினர் விஷேட தேவையுடைய 29 பிள்ளைகளைத் தத்தெடுத்து வளர்த்து வருகின்றனர். அமெரிக்காவின் வெர்ஜினிய மாநிலத்தில் உள்ள பாலிங் வோட்டர்ஸ் பிரதேசத்தை சேர்ந்த ஜெனி பிறிக்ஸ் பால் என்ற தம்பதியினர் தாங்கள் பெற்ற 5 பிள்ளைகளுடன் உலகெங்கிலும் உள்ள 29 விஷேட தேவையுடைய குழந்தைகளைத் தத்தெடுத்து வளர்க்கின்றனர்

மெக்ஸிக்கோ, ரஷ்யா, உக்ரைன், பல்கேரியா உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த உடல் குறைபாட்டால் பாதிக்கபட்ட பிள்ளைகளை அவர்கள் வளர்க்கின்றனர்.

அவர்கள் வளர்க்கும் குழந்தைகளுக்கு புற்றுநோய், இளம்பிள்ளை வாதம், சிறுநீரக பிரச்சனைகள் இருப்பதாகக் கூறப்படுகிறது . இது குறித்து இந்த தம்பதியினர் கூறுகையில் “எங்களுக்குக் குழந்தைகளுடன் கொஞ்சி விளையாடுவது மிகவும் பிடிக்கும். இன்னும் பல குழந்தைகளை தத்தெடுக்க ஆசைப்படுகிறோம் என்று தெரிவித்துள்ளனர்.

### அகக் கண்கள் தந்த ஆனந்த வெற்றிகள்

யாழ் விழிப்புலனற்றோர் சங்கம் பார்வையற்றவர்களுக்குச் சேவையாற்றும் நிறுவனங்களை ஒருங்கிணைத்து நடாத்திய “அகக் கண்கள் தந்த ஆனந்த வெற்றிகள்” அரங்கேற்றும் “கலை விழா”. சங்க தலைவர் A.S அற்புதராஜ் தலைமையில் கடந்த 14.11.2015 அன்று யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக உலகத் தமிழர்களின் அன்புக்குரிய மூத்த அறிவிப்பாளர் திரு. B.H அப்துல் ஹமித் அவர்களும் கௌரவ விருந்தினராக ஓய்வு நிலை இசை ஆசிரியர் திரு.பொன். சிறீவாம தேவன் அவர்களும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

இந் நிகழ்வில் நவீலட் பாடசாலை மாணவர்களின் தனி நடனம் மற்றும் குழுப்பாடல் என்பனவும் யாழ் விழிப்புலனற்றோர் சங்கத்தினரின் நாட்டார் பாடல் மற்றும் வில்லிசை என்பனவும் , வன்னி விழிப்புலனற்றோர் சங்கத்தினரின் தனி நடனம் மற்றும் தாளலயம் என்பனவும் கருவி நிறுவனத்தினரின் காலமழை எனும் கவியரங்கமும் வாழ்வக மாணவர்களின் மனுநீதி கண்ட சோழன் எனும் தொனிப் பொருளிலான தென்மோடிக் கூத்தும் இனிய வாழ்வு இல்லத்தினரின் நாடகமும் இடம் பெற்றன.

### சர்வதேச மாற்றுத் திறனாளிகள் தினம்

கருவி மாற்றுத்திறனாளிகளின் சமூக வள நிலையம் இவ்வாண்டிற்கான மாற்றுத்திறனாளிகள் தின நிகழ்வுகளை “ விசேட தேவையுடைய நபர்களை சகல ஆற்றல் உடையவர்களாக்குவதற்கு அணுகுதல் மற்றும் வலுவூட்டுதல் விடயங்களை உள்ளடக்குதல்” எனும் இவ்வாண்டிற்கான தொனிப்பொருளில் கொண்

டாடி இருந்த்து.

மேற்படி நிகழ்வுகள் கடந்த 06.12.2015 ஞாயிற்றுக்கிழமை கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை மாலதி சுப்பிரமணியம் அரங்கில் நிறுவன பொருளாளர் திரு.யே.கொன்கிளே டியஸ் தலைமையில் நடை பெற்றது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக மாவட்ட செயலாளர் திரு. நாகலிங்கம் வேதநா யகன் அவர்களும் சிறப்பு விருந்தினர்களாக யாழ்.பல்கலைக்கழக கைதடி சித்த மருத்து வத்துறை விரிவுரையாளர் திருமதி.திலகேஸ் வரி குமுதரஞ்சன் அவர்களும், சண்டிலிப்பாய் பிரதேச செயலக சமூக சேவை உத்தியோ கத்தர் திரு.வே.சிவராஜா அவர்களும் கௌரவ விருந்தினர்களாக கொழும்பு இலங்கை மன் றக் கல்லூரி விரிவுரையாளர் திரு.கி.ஐங் கரன் அவர்களும் வர்த்தகர் லயன் தயாபரன் அவர்களும் கிருபா சாரதி பயிற்சிப் பாட சாலை உரிமையாளர் திரு.அ. கிருபாகரன் அவர்களும் கலந்து சிறப்பித்தனர்.

இந் நிகழ்விற்கான ஆசியுரையினை அச் செழு மெதடிஸ் திருச்சபை பொறுப்புக் குரு, றொபேட் சசிகரன் அவர்கள் வழங்கியிருந் தார். இந் நிகழ்வின் போது கருவி மாற்றுத்தி றனாளிகளின் சமூக வள நிலையம் சர்வதேச மாற்றுத்திறனாளிகளின் தினத்தை முன் னிட்டு சமூகத்தில் மாற்றுத்திறனாளிகள் தொடர் பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கு டன் பொதுமக்கள், மற்றும் பாடசாலை மாண வர்கள் இடையே நடாத்திய கவிதை, கட்டுரை, சிறுகதை , ஓவியப் போட்டிகளில் வெற்றி பெற றவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டது.

இந் நிகழ்வின் போது எமது நிறுவன தயாரிப்பான Shine எனும் திரவ சலவை சவர்க் காரம் எமது பயனாளிகள் ஐவரின் வாழ்வா தாரத்தை மேம்படுத்தும் நோக்குடன் வழங்கி வைக்கப்பட்டது. அத்தோடு கலாச்சார அலுவல் கள் திணைக்களம் மாற்றுத்திறனாளிக ளுக்கு இடையே நாடளாவிய ரீதியில் நடாத் திய பாட்டுப் போட்டியில் முதலிடத்தையும், குழுநாடகத்தில் இரண்டாம் இடத்தினையும் பெற்ற கருவி கலைஞர்களுக்கு சான்றிதழ் களும், நினைவுச் சின்ன மும் வழங்கப்பட்டன. மேலும் பாடசாலையில் கல்வி பயிலும் அங் கத்தவர்களின் பிள்ளைகளுக்கு மாதாந்த கல்வி நிதியும் வழங்கப்பட்டது. அத்தோடு கருவி ஸ்ராக சுருதி இசைக் குழுவினரின் இசைநிகழ்வும் இடம் பெற்றமை குறிப்பிடத் தக்கது.

## 28 வருடங்களாக இலங்கையின் சுதந்திர தின நிகழ்வில் தொடர்ந்து பங்குபெறும் ஜேர்மன் மாற்றுத்திறனாளிப்பெண்

ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த ஹெலன் கோல் என்னும் பெண்மணி கடந்த 28வருடங்களாக இலங்கையின் சுதந்திர தின நிகழ்வில் கலந்து கொள்வதற்காக வருகை தருகின்றார் .

இவர் 18வயதுமுதல் நரம்பு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதுடன் கடந்த பலவருடங்க ளாக நடக்க முடியாத நிலைக்கு ஆளாகியுள்ளார் .தற்போது சக்கர கதிரையில் இருந்தபடி தனது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளும் அவர் . இலங்கைக்கு வரும் போதும் விசேட சக்கரக் கதிரையும் கொண்டு வருகின்றார்.

1989ம் ஆண்டு முதல் சுகந்திர தின நிகழ்வில் கலந்து கொள்ள வருகை தரும் இவர் ஜனவரி மாத பிற்பகுதியிலேயே இலங்கைக்கு வருகை தந்து பெந்தோட்டையிலுள்ள உல்லாச விடுதி யில் தங்கி அங்கிருக்கும் வெளிநாட்டு சுற் றுலாப் பயணிகளுடன் இணைந்து வருடாந்தம் பெப்ரவரி 4 ம் திகதி நடைபெறும் சுதந்திர தின நிகழ்வுகளில் தவறாது கலந்து கொண்டு வரு கின்றார்.

இவ்வாண்டும் இக் ஹோட்டலில் நடை பெற்ற சுதந்திர தின நிகழ்விலும் இவர் கலந்து கொண் டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.




## வடமாகாணம்

இலச்சினை

உதயம் : நவம்பர் 14 1987

பரப்பளவு : 8884 Km (13.54%)

(நிலம் : 8290 Km)

மக்கள் தொகை : 1058762(5.22./.)

இனம் : இலங்கைத் தமிழர் : 987692 (93.29%)

இலங்கை முஸ்லீம் : 32364(3.06%)

சிங்களவர் : 32331(3.05%)

இந்தியத் தமிழர் : 6049 (0.57%)

ஏனையோர்: 326 (0.03%)

சமயம் : இந்து: 789362(74.56%)

கிறீஸ்தவம்:204005(19.27% )

இஸ்லாமியர்: 34040 (3.22%)

பௌத்தர் : 30387(2.87%)

ஏனையோர்: 968(0.09%)

மாவட்டங்கள் : யாழ்ப்பாணம்

கிளிநொச்சி

முல்லைத்தீவு

மன்னார்

வவுனியா

தேர்தல் மாவட்டம் : யாழ்ப்பாணம்

வன்னி

தலைநகர் : யாழ்ப்பாணம்

அரசாங்க வகை: மாகாணசபை

அமைப்பு : வட மாகாண சபை

ஆளுனர் :ரெஜினோல்ட் கூரே

( Rejinold koorey)

முதலமைச்சர் : க.வி.விக்னேஸ்வரன்

அஞ்சல் குறியீடுகள் : 40000 -45999

தொலைபேசி குறியீடுகள் : 021,023,024

ISO: 3166 LK-4

வாகனப்பதிவு : NP

அதிகார பூர்வ மொழிகள் : தமிழ், சிங்களம்


மலர் : காந்தள் மலர்

மரம் : மருது

பறவை : 7 சகோதரிகள்

விலங்கு : ஆண்மான்

கொடி



வடமாகாணத்திற்கான கொடி மே 22, 2007 ல் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

கொடியில் நான்கு புறமும் உள்ள நீலநிறத்திலான விழிம்புப்பகுதி கடல் சார் வழங்களை குறிக்கின்றது. மூன்று நிறப் பட்டைகளை கொண்ட இக் கொடியின் நடு வில் உள்ள வெள்ளைப்பட்டை சகோதர மனப் பாண்மை சமாதானம், ஒத்து வாழ்தல் என்பன வற்றை குறிக்கின்றது.

வலப்பக்கம் உள்ள பச்சைப் பட்டை பசுமை யினை குறிக்கின்றது. இடப்பக்க முள்ள சிவப்புப்பட்டை கடின உழைப்பு பெரு முயற்சி என்பனவற்றை குறிக்கின்றது. நடுவே உள்ளே வெண்ணிற பட்டையில் உள்ள 24 கதிர்களை கொண்ட வட்டமான சூரியனின் வடிவம் ஒரு மித்து தொழிற்படும் சக்தி மற்றும் இயற்கை சக்தி வழங்கல் என்பனவற்றை குறிக்கின்றது.

வடமாகாண சபைக்கு 38 உறுப்பினர்கள் விகிதாசார பிரதி நிதித்துவ தேர்தல் முறை யில் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். முதலா வது தேர்தல் 2013 புரட்டாதி 21 ல் நடைபெற்றது. இதில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு 353595 (78.48%) வாக்குகளை பெற்று 30 ஆசனங்களை கைப்பற்றியது.

ஐக்கிய மக்கள் சுகந்திர கூட்டணி 82836 (18.38%) வாக்குகளைப் பெற்று 7 ஆசனங்களை கைப்பற்றியது.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் 6761 (1.50%) வாக்குகளை பெற்று ஒரு ஆசனத்தை கைப் பற்றியது. ஏனைய கட்சிகளும் சுயேட்சை குழுக் களும் 7380 (1.64%) வாக்குகளைப் பெற்ற போதி லும் ஆசனங்கள் எதையும் பெறவில்லை .

மாகாண சபையின் பதவிக் காலம் அதன் முதலாவது அமர்வு இடம் பெற்ற நாளில் இருந்து ஆகக் கூடியது ஐந்து ஆண்டுகள் ஆகும்.

## அமைச்சர்கள்

க.வி.விக்னேஸ்வரன் (முதலமைச்சர்) (தமிழ் அரசுக் கட்சி) நிதி மற்றும் திட்டமிடல், சட்ட மன்ற ஒழுங்கு, காணி, வீதி அபிவிருத்தி மின்சாரம், வீடு மற்றும் நிர்மானம் நீர்வளம் கூட்டுறவு, அபிவிருத்தி, சமூக சேவைகள் புனர்வாழ்வு, மகளிர் விவகாரம், கைத்தொழில் மற்றும் வர்த்தக மேம்பாடு சுற்றுலா உள்ளூர் ஆட்சி மாகாண சபைகள் நிர்வாகம் உணவு வழங்கல் மற்றும் விநியோகம்.

1. பொ.ஐங்கரநேசன் (EPRLF) வேளாண்மை கால் நடை, நீர்பாசனம் சூழல்
2. பா.டெனிஸ்வரன்(Telo) மீன்பிடி, போக்கு வரத்து, கிராம அபிவிருத்தி
3. த.குருகுலராஜா (தமிழரசுக் கட்சி)

கல்வி, கலாச்சாரம், விளையாட்டுத் துறை, இளைஞர் விவகாரம்.

4. ப.சத்தியலிங்கம் (தமிழரசுக்கட்சி) சுகாதாரம், சுதேச மருத்துவத்துறை

1987 ஆடி 29 ல் கைச்சாத்திடப்பட்ட இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரம் 1987 கார்த்திகை 14 ல் இலங்கை பாராளுமன்றத்தில் அரசியல் அமைப்பில் 13 வது திருத்தமாக மாகாண சபைச் சட்டம் (இலக்கம் 42) ஏற்றுக் கொள்ளப்பட்டது. இதன்படி 1988 மாசி 3 ல் 9 மாகாண சபைகளும் உருவாக்கப்பட்டன.

இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் படி வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் ஒன்றிணைக்கப்பட்ட ஒரு மாகாண அரசின் கீழ் செயற்படுவது என இணக்கம் காணப்பட்டது. இவ் இணைப்பு நிரந்தர இணைப்பாக இருப்பதற்கு கிழக்கு மாகாணத்தில் பொது வாக்கெடுப்பு நடாத்தப்பட வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது. 1988 புராட்டாதி 2 ல் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் வடகிழக்கு மாகாண சபை என்ற பேரில் இணைக்கப்பட்டது. இதற்கான முதலாவது தேர்தல் 1988 கார்த்திகை 19 ல் நடைபெற்றது. இத்தேர்தலில் EPRLF வெற்றிபெற்றது. அதன் தலைவர் அ.வரதராஜப் பெருமாள் முதலமைச்சர் ஆனார். 1990 பங்குனி 1 ல் இந்திய அமைதிப் படையினர் இலங்கையை விட்டு இந்தியா சென்ற வேளை வரதராஜப் பெருமாள் நாட்டை விட்டு வெளியேறியமையால் அப்போது ஜனாதிபதியாக இருந்த பிரேமதாச வடகிழக்கு மாகாண சபையை கலைத்து மத்திய அரசின் நேரடி ஆட்சியின் கீழ் கொண்டு வந்தார்.

வடக்கு கிழக்கு இணைப்பானது பொது வாக்கெடுப்பின்றி ஒவ்வொரு ஆண்டும் அரசுத் தலைவர்களால் தற்காலிக இணைப்பாக நீடிக்கப்பட்டு வந்தது. இவ் இணைப்பு சட்ட விரோதமானது என 2006 ஐப்பசி 16 ல் உயர் நீதி மன்றம் தீர்ப்பு வழங்கியதை தொடர்ந்து 2007 தை 1ல் வடகிழக்கு மாகாணங்கள் இரண்டாக பிரிக்கப்பட்டன. இதற்கமைய வட மாகாண சபைக்கான முதல் தேர்தல் 2013 புராட்டாதி 21 ல் நடாத்தப்பட்டது.

## பிரான்ஸ் (France)

பிரான்ஸ் அகலக் கோடுகள் $41^0$ ஆன வடக்கு $51^0$ வடக்கு என்பன வற்றுக்கும் நெடுங் கோடுகள் $5^0$ மேற்கு $10^0$ கிழக்கு என்பனவற்றுக்கும் இடையில் மேற்கு ஐரோப்பாவின் விழிம் போரத்தில் அமைந்துள்ளது. பிரான்ஸ் மேற்கு ஐரோப்பாவில் தனது பெருநிலப் பரப்பினையும் மற்றைய பகுதிகளில் ஆட்சிப் பகுதிகளையும் தீவுகளையும் கொண்ட நாடாகும். தெற்கே மத்திய தரைக்கடல் வடக்கே ஆங்கிலக் கால்வாய் மற்றும் வடகடல் என்பனவும் காணப்படுகின்றன.

அறுகோணி அமைப்பில் காணப்படும் பிரான்ஸ் மேற்கு ஐரோப்பாவில் மிகப் பெரிய நாடாகவும், ஐரோப்பிய நாடுகளில் மூன்றாவது பெரிய நாடாகவும் விளங்குகின்றது.

அயல் நாடுகள்:- பெல்ஜியம், ஜேர்மனி, சுவிஸ்லாந்து, லக்சம்பேக், இத்தாலி, மொனாக்கோ, அன்ரோரா, ஸ்பெயின்

பரப்பளவு:- 674843 கி.மி

மக்கள் தொகை:- 63,587,700(2006 மதிப்பிடு)

நாணயம்:- யூரோ

தலைநகரம்:- பரிஸ்

ஆட்சிமொழி:- பிரெஞ்சு

அரசு:- ஒற்றையாட்சி குடியரசு

மொத்த தேசிய உற்பத்தி: 1830 டிரில்லியன் அமெ.டொலர்

ஆழ்வீத மொத்த தேசிய உற்பத்தி:- 29,316 அமெ.டொலர்

பிரான்ஸ் ஐக்கிய நாடுகள் சபை, G8 நாடுகள் ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றில் உறுப்புரிமை பெற்றுள்ளதுடன் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் வீட்டோ அதிகாரத்தைச் செலுத்தும் நாடாகவும், உலகில் அங்கிகரிக்கப்பட்ட 8 அணுசக்தி நாடுகளில் ஒன்றாகவும் விளங்குகின்றது. உலகில் நான்காவது பணக்கார நாடாக திகழும் பிரான்ஸ் உலகிலே அதிக சுற்றுலா பயணிகள் செல்லும் நாடாக திகழ்கின்றது. பொருளாதாரத்தில் வளர்ச்சி அடைந்துள்ள நாடான இது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் அடிப்படையில் உலகின் 5 வது பெரிய பொருளாதாரத்தை கொண்டுள்ளது. மேலும் உலகின் 2 வது பெரிய தனிப் பொருளாதார வலயம் பிரான்சிலேயே உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## யானை

திணை:- விலங்கினம்

தொகுதி:- முதுகுநாணி

துணைத்தொகுதி:- முதுகெலும்பி

வகுப்பு:- பாலூட்டி


வரிசை:- Proboscidea

பெருங்குடும்பம்: Elephantoidea

குடும்பம்:- Elephantidae

குரல் வகை:- பிளிறல்

தாவர உண்ணிகளான யானைகள் நிலத்தில் வாழும் விலங்கினங்களில் மிகப்பெரி யனவாகும் இவை 70 ஆண்டுகள்வரை உயிர் வாழக் கூடியவை யானைகள் மிகவும் வலி மையானவை சிங்கம்,புலி முதலிய விலங்கு களும் இதனை நெருங்க முடியாத அளவிற்கு இவை வலிமை பெற்றுள்ளன. யானைகள் குடும்பமாக வாழும். இவை அதிக ஞாபக சக்தியினை கொண்டவை.



இன்று உலகில் யானைகளின் மூன்று சிற்றினங்கள் தான் எஞ்சியுள்ளன. அவையா வன ஆபிரிக்க புதர்வெளியானைகள் ஆபி ரிக்கக்காட்டு யானைகள் ஆசிய யானைகள் என்பனவாகும். பொதுவாக எல்லா யானை களினதும் ஆயுட்காலம் சராசரியாக 70 ஆண் டுகளாகவே காணப்படுகின்றன.

தமிழில் ஆண் யானைகளை களிறு என் றும் பெண் யானைகளை பிடி என்றும் அழைப் பர்.

ஆபிரிக்க யானைகள் ஆசிய யானைகளை விட உயரமானவை. இவை பெரிய காதுகளைக் கொண்டுள்ளன. அத்தோடு ஆபிரிக்க ஆண் மற்றும் பெண் யானைகள் தந்தங்க ளைக் கொண்டுள்ளன. ஆசிய பெண் யானைகளை

பொறுத்தவரை அவற்றிற்கு தந்தம் அரிதாகவே காணப்படுகின்றன. ஆபிரக்க யானைகளின் முதுகுப்புறம் தலைக்கு அடுத்து சற்று உள் நோக்கி வளைந்தும் ஆசிய யானைகளின் முதுகுப்புறம் சற்று உயர்ந்த மேடாகவும் காணப்படும். ஆபிரிக்க யானைகளின் துதிக்கையில் 2 இதழ்கள் காணப்படும். அதே வேளை, ஆசிய யானைகளின் துதிக்கை நுனியில் ஒரே ஒரு இதழே இருக்கும். இவற்றின் முன்னங்கால்களில் ஐந்து நகங்களும் பின்னங்கால்களில் 4 நகங்களும் காணப்படும். அதேவேளை ஆபிரிக்க யானைகளின் முன்னங்கால்களில் நான்கு அல்லது ஐந்து நகங்களும் பின்னங்கால்களில் மூன்று நகங்களும் காணப்படும்.

யானைகள் மூங்கில், கரும்பு போன்றவற்றை விரும்பி உண்ணும் இவை ஒரு நாளைக்கு 16 மணி நேரத்தை உணவுக்காக பயன்படுத்துகின்றன. ஒரு நன்கு வளர்ந்த யானை நாளொன்றுக்கு 140-170 கிலோ வரையான உணவை உட்கொள்ளுகின்றனது.

ஆண் யானை பொதுவாக 3 மிற்றர் உயரமும் 6000 கிலோ எடையும் கொண்டவை. யானையின் தும்பிக்கை 40000 தசைகளால் ஆனது. இது எல்லாப்புறங்களாலும் வளையக் கூடியது. தும்பிக்கை நுனியில் யானை மூச்சுவிடும் மூச்சுத்துளை உள்ளது. அத்துடன் சிறிய நுண்நுணர்வுள்ள விரல் நீட்சியும் இருக்கின்றது. யானைகளின் தந்தம் அவற்றின் கடவாய் பற்களின் நீட்சி ஆகும். இவை 3 மிற்றர் வரை வளரக்கூடியவை இவற்றின் எடை கிட்டத்தட்ட 90 கிலோ கிராம் வரை இருக்கும்.

யானைகள் மிகச் சிறந்த கேட்கும் திறனையும் மோப்ப சக்தியையும் கொண்டவை. இவற்றின் கண்கள் சற்று கிட்டப் பார்வையை கொண்டது.

யானையின் கற்ப காலம் 22 மாதங்களாகும் இதுவே பாலூட்டிகளில் மிக நீண்ட கற்ப காலம் ஆகும் யானைகள் பொதுவாக ஒரே ஒரு கன்றையே ஈனுகின்றன. யானை குட்டி ஈனும் முன்னும், ஈனும் பொழுதும், குட்டி ஈன்ற பின்னரும் அதனைச் சுற்றி மற்ற வளர்ந்த தாய் யானைகள் இருந்து மிகவும் உதவி புரிகின்றன. யானைக் குட்டி பிறந்ததில் இருந்து அதன் கூட்டத்தாலே வளர்க்கப்படுகின்றது.

யானைகளுக்கு இருதயக் கோளாறுகள் மாரடைப்பு மூளையில் ஏற்படும் இரத்தக்கட்டி போன்றவற்றால் யானைகளுக்கு இறப்புக்கள் ஏற்படுகின்றன.

## மஞ்ச வண்ணா

1. மறுபெயர்கள்: நுணா, மஞ்சணத்தி, மஞ்சள் நீராட்டி
2. ஆங்கிலம் : Indian mulberry (இந்தியாவின் மல் பெரி)
3. தாவரவியற் பெயர் : மெறின்டா ரிங்ரோறியா (morinta tin toria)
4. குடும்பம் : ரூபியேசியே (Rubiaceae)

இம் மரத்தினது துளிர், இலைப்பட்டை மற்றும் வேர் என்பன மருத்துவ குணமுடையன. இதன் பழம் செண்பக பறவைக்கு விருப்பமானது. எல்லா வகையான நிலங்களிலும் வளரக் கூடியது. இம்மரம் ஒரளவு உயரமாக வளரக் கூடியது. இம் மரத்தின் உட்புறம் மஞ்சள் நிறமாக இருப்பதனால் இதனை மஞ்ச வண்ணா என அழைப்பர். விதைகள் மூலமாக

இனப் பெருக்கம் நடைபெறும் இதன் இலைகள் கால் நடைக்கு தீவனமாகின்றது.

நுணாபட்டையானது கரப்பான், கபசுரம், புண், கிரந்தி இவற்றையும், இலையானது மந்த மேகத்தினையும் கட்டுப்படுத்தக் கூடி யது. நுணாக் காயை உப்புடன் சேர்த்து அரைத்து பற்பொடி தயாரிக்கலாம். இப் பற்பொடி பல்வலி, வீக்கம், குருதிக்கசிவு, என்பனவற் றை குணமாக்கவல்லது. நுணா வேரை கசாய மிட்டு குடிக்க சுகப்பேதியாகும். நுணாப்பட்டை கழலை, தேகப்புண் எனபனவற்றை குணப் படுத்தும்

நுணாவினது கனிகள் நோவினை குண மாக்கவும், உடல் புத்துணர்ச்சி கொள்ளவும், இறந்த கலங்களை புதுப்பிக்கவும், இரத் தத்தை சுத்திகரிக்கவும், உணவு சமிபாட்டைத் துரிதமாக்கவும், உடலின் எதிர்ப்புசக்தி பொறி முறையை தூண்டிவிடவும், தோற் சுகா தாரம், தலைமயிர் மற்றும் மண்டையோட்டின் சுகாதா ரம் பேணவும், புற்றுநோய் உருவாதலிலிருந்து பாதுகாக்கவும், நீரிழிவு, பாரிசவாதம் மற்றும் மூட்டுவாதம் என்பன ஏற்படுவதைக் குறைக்க வும் வல்லன என மருத்துவ நூல்கள் எடுத்தி யம்புகின்றன.

நுணா மரம் சிற்பவேலைகள் செய்வதற்கு அதிகளவில் பயன்படுத்தப்படுகின்றது. எனவே பலவகையான பயன்களை தரும் மஞ்சவண் ணாவை நாமும் வளர்த்து பயன் பெறுவோ மாக.

## செவ்வாய் (Mars)

சூரிய குடும்பத்தில் உள்ள கோள்களில் ஒன்றான செவ்வாய் சூரியனில் இருந்து நான் காவது கோளாக உள்ளது. இது 2 வது சிறிய கோளாகும் இதன் மேற்பரப்பில் காணப்படும் இரும்பு ஒட்சையிட் இதனை செந்நிறமாக காட் டுகின்றது. இதனாலேயே இதற்கு செவ்வாய் என்ற பெயர் ஏற்பட்டது. இதன் மேற் பரப்பில் புவியில் உள்ளதை போன்ற எரிமலைகள், பள்ளத்தாக்குகள், பாலைவனங்கள், பனிமுடிய துருவப் பகுதிகள் என்பன காணப்படுகின் றன. சூரிய மண்டலத்திலேயே மிக உயரமான ஒலிம்பசு மலையும் மிகப் பெரிய செங்குத் தான மரினர்பள்ளத்தாக்கும் செவ்வாயிலேயே உள்ளது. செவ்வாய்க்கு போபோசு டெய்போசு என இரு நிலவுகள் உள்ளது. செவ்வாயின் மண் காரத் தன்மை கொண்டதாகவும் மக்னீ சியம், சோடியம், பொட்டாசியம், குளோறைியிட் போன்றவற்றைக் கொண்டதாகவும் காணப்ப டுகின்றது. செவ்வாயின் மேற்பரப்பின் வெப் பநிலை +27 முதல் -126 டிகிரி வரை உள்ளது. செவ்வாயின் வளி மண்டலம் மிகவும் மெல் லியது. காபனீர் ஒட்சையீட்டை கொண்டது. அண்மையில் நாசா வெளியிட்டுள்ள தகவல் களின் படி செவ்வாயில் தண்ணீர் இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. செவ்வாயிலுள்ள மலைப் பகுதிகளிலும் பள்ளத் தாக்குகளிலும் தரைப் பரப்பிலும் தண்ணீர் இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. இத் தண்ணீர் குளிர் காலத் தில் உறைந்து போய் காணப்படுகின்றது என் றும், வெய்யில் காலங்களில் திரவநிலைக்கு மாறி ஓடுகின்றது என்றும் நாசா விண்வெளி நிலையம் தெரிவித்துள்ளது.

**சுற்றுப்பாதை சார்ந்த இயல்புகள்**

1. சராசரி ஆரம் : 227,936,640 கிலோ மிற்றர்
2. வட்டவிலகல் : 0.09341233
3. சுற்றுக் காலம் : 686.98 நாட்கள்
4. பூமியை சார்ந்த சுற்றுக்காலம் : 779.95 நாள்கள்
5. அச்சுச் சாய்வு : 1.85061$^{0}$(பாகை)

6. துணைக் கோள்கள் : 2

### பௌதீக இயல்புகள்

7. மையக் கோட்டு விட்டம் : 6,794.4 கிலோ மிற்றர்

8. மேற்பரப்பளவு : 144 மில்லியன் கிலோ மீற்றர்

9. திணிவு : 6.4191*1023 கி.கி

10. மேற்பரப்பு ஈர்ப்பு : 3.71 மிற்றர்/செக் 2

11. சுழற்சிக்காலம் : 24.6229 மணி

12. மேற்பரப்பு வெப்பநிலை : 133 K 210 K 293K

### வளிமண்டல இயல்புகள்

13. காபனீர் ஒட்டையிட் ($Co_2$) : 95.32%

14. நைதரசன் ($N_2$) : 2.7%


15. ஆர்கன் (Ar) : 1.6%

16. ஒட்சிசன் ($O_2$) : 0.13%

17. கார்பன் மோனாக்சைட் : 0.07%

18. நீராவி : 0.03%

## பாரதியார்



இந்தியாவின் தமிழ் நாட்டில் தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள எட்டயபுரத்தில் 1882 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 11 ம் திகதி சின்னத்தம்பி ஐயர் இலக்குமி அம்பாள் தம்பதியினருக்கு பாரதியார் மகனாகப் பிறந்தார். இவரது இயற்பெயர் சுப்பிரமணியன். ஆனால் சுப்பையா என்றே அழைத்தனர். 1887 ம் ஆண்டு இவருக்கு 5 வயதாக இருக்கும் போது தாயாரான இலக்குமி அம்மாள் மறைந்தார். இவரது பாட்டியான பகீரதி அம்பாளிடம் வளர்ந்தார். தனது 11 ம் வயதில் பள்ளியில் படித்து வரும் பொழுது கவிபுனையும் ஆற்றலை வெளிப்படுத்தினார். 1897 ம் ஆண்டு செல்லம்மாள் என்பவரை திருமணம் செய்தார். இதன் பயனாக தங்கம்மா, சகுந்தலா எனும் இரு பிள்ளைச் செல்வங்களை பெற்றார்.

பாரதியார் தமிழ், ஆங்கிலம், கிந்தி, சமஸ்கிருதம், வங்காளம் ஆகிய மொழிகளில் புலமை பெற்றவர். பாரதியாரை சுப்பையா முண்டாசுக் கவிஞர், மகாகவி சத்திதாசன் எனவும் அழைப்பார். இவர் செய்தியாளராக பணிபுரிந்தவர். எனினும் இவர் கவிஞர் ஆகவே எல்லோராலும் அறியப்பட்டு விளங்கினார். இவர் எழுதிய கவிதைகளுள் பாஞ்சாலி சபதம், பாப்பா பாட்டு, கண்ணன் பாட்டு என்பன சிறந்தவை. இவர் நவீன கவிதைகளுக்கு முன்னோடியாக திகழ்ந்தவர். 1898 ல் தொழிலில் ஏற்பட்ட நட்டத்தினால் வறுமை நிலையை அடைந்தார். இதனால் காசிக்கு சென்று 1902 வரை அங்கு வாழ்ந்தார். பின்னர் எட்டயபுரத்து மன்னர் பாரதியாரை அழைத்து வந்து அரண்மனையில் வாழ வழி ஏற்படுத்திக் கொடுத்தார். 7 ஆண்டு பாட்டு எழுதாமல் இருந்த பின்னர் 1904 ம் ஆண்டு மதுரையில் இவர்எழுதிய பாடல் விவே கபானு இதழில் வெளியானது.

1921 ம் ஆண்டு யூலை மாதம் திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயிலில் உள்ள

யானை பாரதியாரை தாக்கியதால் நோய் வாய்ப் பட்ட இவர் 1921 செப்டம்பர் 12 அதிகாலை 1.30 மணியளவில் பூதவுடல் நீக்கி புகழ் உடல் தாங்கினார்.

## கோபம் மாரடைப்பை ஏற்படுத்துமா?

கோபம் உயர் இரத்த அழுத்த நோயின் ஒரு அறிகுறி அல்ல ஆனால் அதிக கோபம் வருபவர்களுக்கு உயர் இரத்த அமுக்கம் வரும் வாய்ப்பு அதிகம். இரத்த அமுக்கம் அதிக மானால் மாரடைப்பு வருவதற்கான சாத்தியக் கூறுகளும் அதிகம்.

எனவே நீங்கள் உங்கள் கோபத்தை அடக் கப் பழகிக் கொள்வது நல்லது. உணர்ச் சிவசப்படும் பொழுது அட்ரீனலின், நோர்அட் ரீனலின் போன்ற ஹோர்மோன்கள் அளவிற்கு அதிகமாக சுரக்கின்றன. இதனால் உடலில் பல்வேறு உறுப்புக்களும் பாதிக்கப்படக்கூடும். குடல்புண், தலைவலி, இடுப்பு வலி, உடல் தளர்வு, மனச்சோர்வு போன்ற பல் வேறு நோய்கள் ஏற்படுகின்றன.

அதிகம் கோபப்படுபவர்களுக்கு உடலும் மனமும் பலவீனமாக இருக்கும் .உடல் மனத் தளர்ச்சிப் பயிற்சிகள் சாந்தியாசனம், தியா னம் ,யோகாசனம் போன்ற ஏதாவது ஒன்றை பயின்று தினமும் முயற்சி செய்து வாருங்கள். கோபம் பறந்து விடும். உடலும் நலம் பெறும்


## கிரிகெட்

கிரிகெட் துடுப்பாட்டம் முதன் முதலாக தென் இங்கிலாந்தில் 16 ம் நாற்றாண்டில் விளையாடப்பட்டது. பின்னர் 18 ம் நூற்றாண் டில் இது இங்கிலாந்து முழுவதும் விளையாடப் பட்டது. அதன்பின்னர் 19 ம்நூற்றாண்டின் நடுப் பகுதியில் சர்வதேச ரீதியில் விளையாடப் பட்டது.

கனவான்களின் விளையாட்டு எனப்படும் கிரிகெட்டின் பிறப்பிடமாக இங்கிலாந்து விளங்குகின்றது. துடுப்பாட்டத்தின் பிதாமக னாக டொனால்ட் பிறட்மன்(Sir Donald George Don Bradman) இவர் பிறந்த போப்ரல் எனும் இடம் துடுப்பாட்டத்தின் புனித பூமி என அழைக்கப்படுகிறது.

துடுப்பாட்டம் தொடர்பான விபரங்களை தரும் நூல் விஸ்டன் ஆகும். 1744 ல் ஆட்ட விதிமுறைகள் உருவாக்கப்பட்டது. கிரிகெட் ஆடு களம் வட்டம் அல்லது நீள்வட்ட வடிவில் அமைக் கப்படுகின்றது.

துடுப்பாட்ட மட்டை வில்லோ மரத்திலி ருந்து தயாரிக்கப்படுகிறது. இதன் நீளம் 96.5cm ஆகவும் அகலம் 11.4cm ஆகவும் எடை 2 பவுண்ஸ் ஆகவும் அமைந்துள்ளது. பந்து இதன் சுற்றளவு 20.79 cm தொடக்கம் 22.8cm வரை காணப்படும். இதன் எடை 5.75 அவுன்ஸ் ஆகும் .



டெஸ் போட்டி 5 நாட்கள் இடம்பெறும். இதில் ஒவ்வொரு அணியும் இரு இன்னிங்ஸ் விளையாடும். இதில் அதிக ஒட்டங்களைப் பெறும் அணி வெற்றி பெறும். உலகின் முதலாவது டெஸ்போட்டி 1787 மார்ச் 15 ல் லண்டன் லோஸ் மைதானத்தில் இடம் பெற்றது. இப் போட்டியில் இங்கிலாந்து அவுஸ்ரேலியா அணிகள் மோதின.

1970 இல் அறிமுகப்படுத்தப்பட்ட ஒரு நாள் போட்டிகள் 50 ஓவர்களை கொண்டது.போட்டியிடும் இரண்டு அணிகளில் ஒவ்வொரு அணிக்கும் 50 ஓவர் வீதம் 100 ஓவர்கள் வழங்கப்படும். அதிகூடிய ஓட்டங்களை பெறும் அணி வெற்றியினை சுவீகரித்துக் கொள்ளும்.உலகின் முதலாவது ஒரு நாள் போட்டி 1971 ஜனவரி 5 ல் அவுஸ்ரேலியாவின் மெல்போன் நகரில் இடம்பெற்றது.

இருபதுக்கு இருபது துடுப்பாட்டம் 2003 இல் அறிமுகபடுத்தப்பட்டது. இப்போட்டிகள் 3.30 மணித்தியாலங்கள் இடம்பெறுகின்றன.


கிரிகெட் விளையாட்டு இரு அணிகளிடையே நடைபெறும். ஒவ்வொரு அணியிலும் 11 வீரர்கள் காணப்படுவர்.

## இலக்கியம்

தமிழை என் உயிர் என்பேன்
கனியிடை ஏறிய சுளையும் - முற்றல்
கழையிடை ஏறிய சாறும்
பனிமலர் ஏறிய தேனும் - காய்ச்சுப்
பாகிடை ஏறிய சுவையும்
நனி பசு பொழியும் பாலும் - தென்னை
நல்கிய குளிரிள நீரும்
இனியன என்பேன் எனினும் - தமிழை
என்னுயிர் என்பேன் கண்டீர்.

பாரதிதாசன்

## தாஜ்மகால்



தாஜ்மகால் இந்தியாவில் உள்ள ஆக்ரா எனும் இடத்தில் உள்ளது. இது புதிய உலக அதிசயங்களுள் ஒன்றாகும். மொகலாய பேரசின் 5 வது பேரரசரான ஷாஜகானால் மறைந்த தனது காதல் மனைவியான மும்தாஜ் என்பவரது நினைவை போற்றும் வகையில் கட்டிவிக்கப்பட்டது. கி.பி 1630 ம் ஆண்டு ஷாஜகானின் உத்தரவுப்படி இந்த பிரமாண்டமான மகூதி கட்டப்பட்டது. நன்கு வடிவமைக்கப்பட்ட தோட்டத்தின் மத்தியில் வெள்ளை சலவைக் கற்களை கொண்டு தாஜ்மகால் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. மொகலாயப் பேரசின் வீழ்ச்சியினால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்ட ஷாஜகான் தன்னுடைய சிறிய சிறை கட்டடத்தின் ஜன்னல் வழியாக மட்டுமே தாஜ்மகாலை காண முடிந்ததாக கூறப்படுகின்றது.

# பிறப்புகள்

## சிறுகதை

பிற்பகல் ஐந்து மணியளவில் "கேக்" வெட்டியதோடு ஆரம்பமான பிறந்ததினக் கொண்டாட்டம் தொடர்ந்து கொண்டிருக்கிறது.இப்போது நேரம் ஆறரை மணியிருக்கும் .

" மூன்றாவது பிறந்தநாள் அழைப்பிதழ்" என்று பிறந்த நாள் அழைப்பிதழில் போடப்பட்டிருந்தாலும் அது ஒரு திருவிழாக் கொண்டாட்டம் போன்றே அமைந்திருந்தது. அவ்வளவு விமர்சையான கொண்டாட்டம்.

ஒழுங்கையில் இரண்டு பக்கமும் பலவகை நிறத்திலான பல்ப்புகள், பலவகையான சோடினைகள், வாசலில் ஒரு பெரிய மேசையில் நிறைகுடம், ஒழுங்கைக் கரையோடு நீளத்திற்கு வாகனங்கள், எண்ணுக் கணக்கற்ற மோட்டார் சைக்கிள்கள்.

அறுபதடி நீளமான மணிப்பந்தல். விருந்தினர்களால் நிறைந்து கொண்டிருந்தது. மணிப்பந்தலின் மேற்குப் பக்கமாக, வலது பக்கத்தில் பலூன் சோடினையின் மத்தியில் தாய்க்கும் தகப்பனுக்குமிடையில் பிறந்த நாள் விழாவுக்குரிய அவர்களின் மகன் ராதையன் அமர்ந்திருக்கின்றான். மணிப்பந்தலின் பின்புற மாகவுள்ள கிழக்குப்பக்கத்தில் இருபதடி நீளமான தொரு மணிப்பந்தல் இது முழுமையாக மறைக்கப்பட்டு சுற்றிவர அடைக்கப்பட்டு ஒரு வாசல் மட்டும் விடப்பட்டிருந்தது. இதன் ஒரு பக்கத்தில் மேசைகளில் வரிசையாக "செல்சேவிங்" எனும் பாத்திரத்தில் ஒவ்வொரு வகையான சிற்றுண்டிகளும், உணவுகளாக இரவுச் சாப்பாட்டிற்கான இடியப்பம், நூடில்ஸ், இட்லி என அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. இச் சிற்றுண்டிக்கான பொறுப்புக்கள் செல்வராணியிடம் விடப்பட்டிருந்தது. இவளுக்குத் துணையாக இந்த வீட்டுக்காரருக்கு உறவான மூன்று பெண்பிள்ளைகளும் நியமிக்கப்பட்டிருந்தனர். செல்வராணி தனது மகன் ராஜனுடன் வந்திருந்தாள் வேலைக்குச் செல்லும் போது, வேலையின் தன்மையை அவதானித்து மகனையும் கூட்டிச் செல்வாள். அவன் தாய்க்கு உதவி செய்வான்.

பிறந்த நாளிற்கு தேவையான சிற்றுண்டி வகைகளை "பேப்பர் பிளேட்டில்" அடுக்கி வைத்து சிற்றுண்டி விநியோகம் ஒழுங்காக நடந்து கொண்டிருந்தது.

செல்வராணி இவருக்கும் இந்த வீட்டுக்காரருக்கும் "அயலவள்" என்ற தொடர்பைவிட வேறெந்த உறவும் இல்லை செல்வராணி இந்தக் கிராமத்தில் வேலைக்காரி....... கலியாணவீடு, செத்தவீடு, பிறந்தநாள் கொண்டாட்டம், இவற்றைவிட, பிள்ளைப்பேறு, படுக்கையாகிவிட்ட நோயாளியைப் பராமரித்தல், சகல வேலைகளையும் செய்வாள் "ராணி" என்று தான் இவளை எல்லோரும் அழைப்பார்கள் ராணியின் குடும்பம் வறுமைப்பட்டது தான் ஆனால் பஞ்சப்பட்டதல்ல....... ராணிக்கு பதினைந்து வயது நடக்கும் போது ராணியின் தகப்பன் ஒரு விபத்தின் போது வலது காலை முழங்காலோடு இழந்துவிட்டார் அதன் பின்பு எவ்வளவோ முயற்சிகளின் பின்னர் "ஜெய்ப்பூர்" கால் பொருத்திக் கொண்டார் முன்பு போல் அவனால் கடுமையான வேலைகள் செய்ய முடிவதில்லை.

காலம் நகர்ந்தது ராணி வளர்ந்தாள் கலியாணப் பருவத்தைத் தொட்டு நின்றாள் வறுமைப் பட்டவர்களை இந்தச்சமூகம் மட்டுமல்ல ஆண்டவனும் சோதிக்கின்றான் என்பதற்கு ராணியும் ஒரு உதாரணம் சராசரி உயரத்தோடு கொஞ்சம் நிறமாக இளமைக் கேற்ற சதைப் பிடிப்புகளோடு அவளின் தோற் றம் இருந்திருந்தால் யாராவது கவர்ச்சிப் பட்டாவது அவளை திருமணம் செய்திருப் பார்கள்.

பாவம் ராணி ..... புளுக்குத்தி ... குறண்டிப்போன கத்தரிக்காய் போன்ற தோற்றம் இன்றைய நாகரிக உலகத்தில் ராணியை யார் தான் திரமணம் செய்ய வருவார்கள்.

ராணியின் தகப்பனும் ஜெய்ப்பூர் காலோடு கல்யாணப் புறோக்கரிடம் நடையாக நடந்தார். ஒரு நாள் கல்யாணப்புறோக்கர் வந்தார்... ”வசதியாக ஒரு மாப்பிள்ளை இருக்கு.... அவர்கள் சீதனத்தை எதிர்பார்க்கவில்லை ஆனால்...... என்று இழுத்தார் “ எதுவாயிருந்தாலும் பரவாயில்லை.. சொல்லுங்கோ” ஆவலுடன் கேட்டார் தகப்பன்.

“ மாப்பிள்ளைக்கு .. சரியாய் பேச்சு வராது அவர் வாய் பேச முடியாதவர் என்று இழுத்தார் ஆனால் நல்ல பெடியன், குடிவெறி இல்லாதவன், ஒரே ஒரு பையன் அவர்களிடம் வீடு, வளவு, கடை எல்லாம் இருக்குதாம். அவர்களுக்கு நல்ல குணமுள்ள பெண் தந்தால் போதுமாம் என்று அடுக்கிக்கொண்டே போனார். இதை எல்லாம் குசினுக்குள் இருந்து கேட்டுக் கொண்டிருந்தாள் ராணி.

புறோக்கர் இது பிள்ளைக்கு வேண்டாம் வேறு இடம் பாருங்கள் அப்பா இந்தகாலத்து இளைஞர்கள் எல்லாம் குடியாலும், போதைப் பொருளாலும் சீரழிகிறார்கள். இவர் அப்படியான ஒரு பழக்கமும் இல்லைத்தானே நான் அவரைச் செய்ய சம்மதிக்கிறேன் என்று தன் விருப்பத்தை தெரிவித்தாள்.

சில தினங்களில் ராணிக்கும் அந்த பையன் ரஞ்சனுக்கும் திருமணம் நடந்தது. சில மாதங்களில் ராணி கணவரின் சைகை மொழியைப் பயின்று கொண்டு விட்டாள் இரண்டு குழந்தைகள் பிறந்தார்கள் இருவரும் அழகான ஆண்குழந்தைகள்.

இரண்டாவது குழந்தை பிறந்து சில நாட்களில் கணவர் ரஞ்சன் திடீரென மயக்கம் போட்டு விழுந்தார். உடனே வைத்தியசாலையில் சேர்த்து ஒரு கிழமையால் அவருக்கு புற்றுநோய் என்று தெரிய வந்தது. ராணியும் தன் நகைகள் அனைத்தையும் விற்று கணவரை காப்பாற்றுவதற்குரிய தீவிர முயற்சியில் ஈடுபட்டாள்.ஆனால்பலனளிக்கவில்லை ரஞ்சன் ஒரு மாதத்தால் இறந்து விட்டார்.

அதற்கு பின்பு ராணி தன் பிள்ளைகளை வளர்ப்பதற்கு வேலை செய்யவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. ஒரு பக்கம் கால் ஏலாத அப்பாவை பார்க்க வேண்டும் தன் குழந்தைகளின் எதிர்காலத்திற்காக உழைப்பது . அதனால் தான் அவள் எல்லா வேலைகளையும் செய்யப் பழகிக் கொண்டாள். அவளின் நேர்மையான நடத்தை எல்லோருக்கும் பிடித்ததுக் கொண்டது. ராணி இல்லாத வீடே இல்லை என்று சொல்லலாம் . அந்தளவிற்கு எல்லோரிடமும் அவள் புகழ் பரவியது.

நேரம் நகர்ந்து கொண்டிருக்கிறது.. விருந்தினர்கள் வந்து போய் கொண்டிருக்கின்றனர், ராணியின் மகன் குமார் பேப்பர் பிளேட்டை எடுத்துப்பிடிப்பான் அதில் ராணி சிற்றுண்டிகளை வைப்பாள் உதவிக்கு நின்ற மூன்று பெண் பிள்ளைகளும் எடுத்துச் சென்று விருந்தினருக்கு பரிமாறுவர். நேரம் நகர்ந்து பந்தல் வெளிக்கின்றது. வீட்டுச் சொந்தக்கார ஐயா வருகிறார்

“ராணி உனக்கும் பிள்ளைகளுக்கும் சாப்பாடும் பலகாரங்களும் ஐஸ்கிறீமும் எடுத்துக் கொண்டு போ.. நாளைக்கும் வேலைக்கு வரவும். இன்று வராதவர்கள் நாளை வரலாம் எனக் கூறியபடி தனது சட்டைப் பையிலிருந்து ஐயாயிரம் ரூபாவை நீட்டினார் ராணியும் அதை மகிழ்ச்சியோடு வாங்கினாள் தனது மகனு டன் வீடு நோக்கிப் புறப்பட்டாள்.

முற்றும்

**ந.பவானந்தமூர்த்தி,** இணுவில்.

# முற்றத்து மல்லிகை



இந்தக் காந்தக் குரலின் கனதியை பதிவாக்கம் செய்ய வேண்டும் என்ற விருப்பம் எனக்குள் நீண்ட நாள் இருந்தது. ஈழத்தில் குறிப்பிட்டுச் சொல்லத்தக்க கர்நாடக இசை ஜாம்பவான்களில் ஒருவர் தான் பொன் ஸ்ரீ வாமதேவன் அவர்கள். கோடை காலத்தின் ஆரம்பத்தை கட்டியம் கூறுமாற்போல் சூரியன் சற்று உச்சம் கொடுத்திருந்த அந்த மதியப் பொழுதில் ஒரு இனிமையான சந்திப்பு வலுவின் முற்றத்தில் இந்த மல்லிகையையும் மலர்த்துவதில் எங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சி.

**வணக்கம் வாமதேவன் ஆசிரியர் அவர்களே!**

வணக்கம்

**வினா - உங்கள் சிறுபராய வாழ்வு பற்றியும் கல்விப் புல வாழ்வு பற்றியும் முதலில் கூறமுடியுமா?**

என்னுடைய தந்தை ச.பொன்னுத்துரை , தாயார் பொ.சரஸாம்பிகை. எனக்கு ஒரு சகோதரனும் உண்டு. எனது தந்தை அதிபராகவும் எனது தாயார் ஆசிரியராகவும் பணியாற்றியிருக்கின்றனர். இருவரும் தற்போது காலமாகி விட்டனர். நான் 1948 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 21 ஆம் திகதி மட்டுவில் கிராமத்தில் பிறந்தேன். 1949 ஆம் ஆண்டு எனக்கு குளுகோமா (Glaucoma) என்னும் நோய் கண்ணில் ஏற்பட்டது. அப்போது மருத்துவர்கள் இந்த நோயினை அடையாளம் காணவில்லை. எனக்கு கண்ணில் பத்து சத்திரசிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டன. 1964 ஆம் ஆண்டு டாக்டர் பரராஜசேகரம் அவர்களால் கண்ணில் குளுகோமா எனும் நோய் அடையாளம் காணப்பட்டது. அப்போது எனக்கு ஒரு கண்ணில் 1/3 வீதமான பார்வையே இருந்தது.

**வினா - இப்படியான சூழமைவில் எவ்வாறு உங்களால் இவ்வளவு தூரம் கல்விப் புலத்தில் பயணிக்க முடிந்தது.**

இறை சித்தமும் பெற்றோரது ஊக்கமும் எனது முயற்சியும் எனக்கு துணை செய்தது என்று சொல்ல வேண்டும்.

**வினா - உங்களது கல்வி நடவடிக்கை பற்றி சொல்லுங்கள்?**

குறைந்த பார்வை மட்டத்துடனேயே க.பொ.த. சாதாரண தரம் வரை பயின்று அப்போது மானிப்பாயில் வாழ்ந்த ஐயாகண்ணு தேசிகர் அவர்களிடம் ஆசிரியர் தரம் வரை இசை பயின்

றேன். 1970ஆம் ஆண்டு தமிழ் நாட்டில் அடையார் என்னும் இடத்தில் உள்ள தமிழ் நாட்டு அரச இசைக் கல்லூரியில் வாய்ப்பாட்டிலும் வயலினிலும் சங்கீத வித்துவான் பட்டத்தினைப் பெற்றுக்கொண்டேன். கல்வி கற்ற காலத்தில் பிருந்தா அம்மா, பாலக்காடு கே.வி. நாரஜணன்சுவாமிபோன்றவிரிவுரையாளர்களிடமிருந்து இசை பயிலக் கூடிய வாய்ப்பு எனக்குக் கிட்டியது.

**வினா - உங்களுடைய ஆசிரியப்பணி வாழ்வுபற்றி எனக்குக் கூற முடியுமா?**

1975 ஆம் ஆண்டு ஜுலை மாதம் முதலாம் திகதி கல்முனை வெஸ்லி கல்லூரியில் ஆசிரியராகப் பணியேற்றேன். மூன்று வருடங்கள் அங்கு பணியாற்றிய பின் கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலைக்கு ஆசிரிய மாணவனாக தெரிவு செய்யப்பட்டேன். இரண்டு வருடங்கள் அங்கு பயின்ற பின் 1980 தொடக்கம் 1982 வரை செட்டிக்குளம் மகா வித்தியாலயத்திலும் 82 - 84 வரை வவுனியா சைவப் பிரகாசா வித்தியாலயத்திலும் 1985 ஆம் ஆண்டு தொடக்கம் 2000 ஆண்டு வரை சாவகச்சேரி இந்து மகளிர் கல்லூரியிலும் 2000 ஆம் ஆண்டு தொடக்கம் 2003 ஆம் வரை தெல்லிப்பழை யூனியன் கல்லூரியிலும் இறுதியாக 2004 - 2008 வரை சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும் இசை ஆசிரியராகப் பணியாற்றியுள்ளேன்.

**வினா - பார்வைப்புலன் சார்ந்த இடர்பாடோடு வெற்றிகரமாக தாங்கள் வாழ்வில் பயணித்திருக்கிறீர்கள். இந்தக் காலப் பகுதியில் தாங்கள் தடைகள், சவால்கள் எவற்றையேனும் எதிர்கொண்டிருப்பின் அதுபற்றி கூறமுடியுமா?**

தடைகள், சவால்கள் என்று எனக்கிருந்ததாக நான் உணரவில்லை. வெஸ்லி கல்லூரியில் முதல் முதலாக நான் பணியேற்றபோது எனது பார்வைப்புலன் சார்ந்து இருக்கின்ற பிரச்சினை காரணமாக சிறிதளவு பயம் எனக்கு இருந்தது. ஒரு அங்குலம் அல்லது ஒன்றரை அங்குலம் அளவான தூரத்தில் வைத்தே எழுத்துக்களை வாசிக்க கூடியதிறன் அப்போது எனக்கு இருந்தது. கற்பித்தல் செயற்பாட்டின் போது எனக்கும் மாணவர்களுக்குமான இடைவினையை வெற்றிகரமாகக் கையாழ்வதில் பிரச்சினைகள் எழும் என நான் கருதியிருந்தேன். ஆனால் எனது எண்ணத்திற்கு மாறாக சிறந்த ஆசிரிய மாணவர் தொடர்பு வலுப் பெறுவதற்கான சூழல் அங்கு அமைந்தது. இந்தக் சூழலானது எனக்கு மிகவும் வாய்ப்பாகவும் தொடர்ந்து நான் உற்சாகத்தோடு ஆசிரியப் பணியில் ஈடுபடுவதற்கு ஏதுவாக அமைந்தது. எனது 33 வருட ஆசிரிய வாழ்வில் மாணவர்கள் நான் எதிர்கொள்ளும் பார்வை புலன் சார்ந்த இடர்பாட்டை பயன்படுத்திக்கொண்டு சுயலாபம் தேடியதாக ஒரு சம்பவம் கூடவில்லை. என்னோடு மிகவும் கௌரவமாகவும் கண்ணியமாகவும் நடந்து கொண்டார்கள். குறிப்பாகச் சொல்லப் போனால் ஏனைய ஆசிரியர்களை விட என்னோடு பயம் கலந்த மரியாதையுடன் பழகினார்கள் என்றே சொல்லவெண்டும். இன்னோர் விடயத்தை இங்கு நான் பகிர்ந்து கொள்ள வேண்டும். எனது பாடத்திற்கு மாணவர்கள் மிகவும் ஒழுங்காகவும் நேர்த்தியாகவும் வருவார்கள். சாவகச்சேரி இந்து மகளிர் கல்லூரியில் கூட்டுறவுக் கடையொன்றை நான் நடாத்தி வந்தேன். அதில் விற்பனையாளராகவும் முகாமையாளராகவும் நானே இருந்தேன். எனது பலவீனத்தைப் பயன்படுத்தி பணத்தையோ பொருளையோ மாணவர்கள் கையாடியதாக ஒரு பதிவுகூட இல்லை. இவற்றை நான் ஏன் குறிப்பிடுகிறேன் என்றால் எனது வாழ்க்கைத் தடத்தில் இப்படியான சிறப்பான சூழமைவுகள் தடைகளையோ சவால்களையோ நான் உணராதபடி செய்திருக்கின்றன என்பதை

வெளிப்படுத்துவதற்கே ஆகும்.

**வினா - தங்களுக்கு பார்வைப்புல இழப்பு இருக்கிறதென்பதை பெற்றோர்கள் அறிந்திருந்த போது அவர்களது மனோநிலை எப்படி இருந்திருக்குமென கூற முடியுமா?**

எனக்கு ஒரு வயதிருக்கும் போது குளுக்கோமா நோய் ஏற்பட்டது. அப்பொழுது அவர்களுடைய மனோநிலை எப்படி இருந்திருக்குமென என்னால் கூறமுடியாது. அவர்களது மனோநிலையை அறியும் பருவம் எனக்கு வந்தபோது அவர்களுக்கு இது இயல்பான நிலையாக மாறிவிட்டது. எமக்கு ஒரு துயர் ஏற்படுகின்ற போது உடனடியாக இருக்கின்றன மனோ நிலைக்கும் காலம் நீண்டு செல்கின்ற போது இருக்கின்ற மனோ நிலைக்கும் இடையில் வித்தியாசம் இருப்பது இயல்பானது. காலம் ஒரு மருந்தாக செயற்படவல்லது எனது விடயத்திலும் இது பொதுவானதே.

**வினா-உங்களுடைய பார்வையிழப்பை கருத்திற்கொண்டு பெற்றோர்கள் உங்களது முயற்சிகளுக்கு தடைபோட்ட சந்தர்ப்பம் உண்டா?**

நிச்சயமாக இல்லை. அனைத்து விடயங்களையும் சுயமாக நான் ஆற்ற வேண்டும் என்பதில் எனது பெற்றோர்கள் மிகவும் உறுதியாக இருந்தார்கள். எனது தாயார் ஆசிரியராக இருந்ததாலோ என்னவோ வீட்டுக் கடமைகளைக் கூட நான் நேர்த்தியாக ஆற்றும் அளவுக்கு என்னைப் பயிற்றுவித்திருந்தார். சமையலைக்கூட சிறப்பாக செய்யும் அளவுக்கு என்னை எனது தாயார் பயிற்றுவித்திருந்தார். சிறு பாராயத்தில் கண்டிப்புடன் அவர் வழங்கிய பயிற்சிகளின் பயன்பாட்டை நான் தற்போது நன்கு உணரக்கூடியதாக இருக்கிறது.

**வினா - 1990 ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் தாங்கள் துவிச்சக்கர வண்டியில் சுயமாக பயணித்திருக்கிறீர்கள் என்பதை நாம் அறிந்திருக்கின்றோம். அது எப்படிச் சாத்தியமானது என்பது பற்றி கூறமுடியுமா?**

நிச்சயமாக நான் அதைக் கூறவேண்டும். சட்டத்துக்கு முரணானதாக இருந்தாலும் நான் அதைச் செய்திருக்கிறேன். மூன்று வருடங்கள் தொடர்ச்சியாக நான் துவிச்சக்கரவண்டியைப் பயன்படுத்தி இருக்கிறேன். நான் துவிச்சக்கிர வண்டியை செலுத்துகின்றபோது வீட்டைப்பற்றியோபாடசாலையைப்பற்றியோ நுண்கலைப் பீடத்தைப் பற்றியோ சிந்திப்பது கிடையாது. அதுவே நான் விபத்துக்களை சந்திக்காமல் பயணிப்பதற்கு உதவியிருக்கிறது. தவிரவும் எதிர்பாராமல் எவராவது குறுக்கே வருவார்கள், பிராணிகள் குறுக்கே வரும் என்ற வகையான எச்சரிக்கையான உணர்வும் இறைவனது துணையும் கூட நான் விபத்துக்களைச் சந்திக்காமல் இருப்பதற்கு துணை செய்திருக்கின்றன என்று கூறலாம்.

வினா - உங்கள் வாழ்வில் மறக்க முடியாத சம்பங்கள், அனுபவங்கள் பற்றிக் கூற முடியுமா?

எனது குறிப்பிடத்தக்கதோர் அனுபவத்தையும் நான் இங்கு பகிர்ந்து கொள்ளவேண்டும். 1990 ஆம் ஆண்டு எனது தலையில் பனங்காய் விழுந்தது. அதன் பின்னர் பார்வை மேலும் குறைவடைந்து புகைமண்டலத்தின் ஊடாகப் பார்ப்பது போன்ற நிலை ஏற்பட்டது. தொடர்ந்து தாங்கிக் கொள்ள முடியாதளவிலான தலை வலியும் ஏற்பட்டது. யாழ். போதனா வைத்தியசாலையில் நான் இருந்தபோது முற்றாக எனக்கு பார்வையிழப்பு படிப்டியாக ஏற்பட்டு விட்டது. சிகிச்சைக்காக இந்தியா சென்றபோதும் பலனளிக்கவில்லை. இந்த தரு

ணத்தில் எனது தந்தையார் மனக்கவலையுற்றதை என்னால் உணர முடிந்தது. மீள நான் ஆசிரியப்பணி செய்ய முடியுமா கல்வித் திணைக்களம் அதற்கு அனுமதி வழங்குமா என்ற கேள்விகளுடனான பயம் என்னுள் எழுந்தது. ஆனால் முழுமையான பார்வையிழப்பின் பின்னர் 1992 ஆம் ஆண்டிலிருந்து 2008 ஆம் ஆண்டு வரையில் 16 வருடங்கள் எனது மனதிற்குத் திருப்தியாக நிறைவான ஆசிரியப் பணியை நான் செய்திருக்கின்றேன்.

மறக்க முடியாத அனுபவம் என்று குறிப்பிடுகின்ற போது மாணவர்களை போட்டிகளுக்காக தயார் செய்து தமிழ்த்தின போட்டிகளில் பங்குபற்ற வைத்தபோது மாகாண மட்டம் வரை சென்று தேசியத்தை அடைய முடியாத சூழ்நிலைகள் இருந்தன. நான் ஓய்வு பெறுவதற்கு முதல் வருடம் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இருந்து மாணவர்கள் எனது நெறிப்படுத்தலில் தேசிய மட்டத்தில் முதலாமிடத்தைப் பெற்றுக்கொண்டார்கள். இது எனக்கு மிகவும் மனதிற்குச் சந்தோசமானதும், மறக்கமுடியாத நிகழ்வாகவும் இருந்தது. ஒரு வேளை இந்தச் சந்தர்ப்பம் அமையாதிருப்பின் தேசிய மட்ட நிலைக்கு மாணவர்களை இட்டுச் செல்லாத ஆசிரியராக நான் இருந்திருப்பேன். தேசிய மட்ட அடைவை மாணவர்கள் பெறுவதற்கு நான் பயிற்றுவித்தமையானது ஒரு மறக்க முடியாத சம்பவமாக அமைகிறது.

**வினா - உங்களுடைய திருமண வாழ்வு பற்றி கூறுங்கள்**

பெற்றோர்களால் நிச்சயிக்கப்பட்ட திருமணம். எனது மைத்துனியை நான் திருமணம் செய்து கொண்டேன். அவரது பெயர் சராதாதேவி. திருமணத்திற்கு முன்னர் அவர் கணக்கியல் இலிகிதராகப் பணியாற்றியிருக்கிறார். திருமணத்தின் பின்னர் வீட்டுப் பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருக்கிறார். எனக்கு ஒரு மகள் உண்டு. இரண்டு பேரப்பிள்ளைகள் இருக்கின்றனர்.

நல்லது அழகான மகிழ்ச்சியான குடும்ப சூழலில் தாங்கள் வாழ்வது எங்களுக்கு மகிழ்ச்சியை தருக்கின்றது.

இசைத்துறை சார்ந்து உங்களிடம் இருந்து சில விடயங்களை வாசக நெஞ்சங்களுக்கு பகிர்ந்து கொள்ள விரும்புகின்றோம்.

**வினா : எமது சமூகத்தில் கர்நாடக சங்கீதத்தின் நிலை தற்போது எப்படி இருக்கின்றது என நீங்கள் கருதுகின்றீர்கள்?**

ஆதிகாலத்தோடு ஒப்பிடுகின்ற போது இசைப் பரம்பல் அதிகமான அளவாக இருக்கின்றது. ஆனால் இசையின் ஆழம் அதிகளவில் இல்லை என்று தான் கூறவேண்டும். தற்போது இசை பயில்பவர்கள் பட்டத்திற்காக, பொழுதுபோக்கிற்காக, வேலைவாய்ப்பிற்காக எனப் பல காரணங்களுக்காக பயில்கின்றனர். முன்பிருந்த இசையாளர்களிடம் இருந்த ஆழத்தை தற்போது இசை பயில்பவர்களிடம் காணமுடியவில்லை.இதற்குத்தொலைக்காட்சி, தொலைபேசி போன்ற நவீன சாதனங்களும் ஒரு வகையில் காரணமாக இருக்கலாம். எங்களுக்கு நவீனம் பல விடயங்களைத் தந்திருக்கிறது. என்றாலும் எம்மிடத்தில் இருந்து பல விடயங்களை எடுத்துக் கொண்டிருக்கிறது என்று தான் சொல்ல வேண்டும்.

**வினா - உள நெருக்கீடுகளுக்கான மருந்தாக இசை இருக்க முடியுமென நீங்கள் கருதுகிறீர்களா?**

நிச்சயமாக இருக்க முடியும். நெருக்கீடுகளுக்குள் ஆட்படுபவர்களுக்கு இசையைக் கேட்க கூடிய சூழல் வாய்க்கப்பெற வேண்டும்.

இசையின் ரம்மியத்தை உள்வாங்குகின்ற தன்மை சம்பந்தப்பட்டவர்களுக்கு இருக்கின்ற போது நிச்சயமாக இசை ஒரு மருந்தாக அமையும்.

**வினா - ஒரு இசையாசிரியராக தாங்கள் சமூகத்திற்கு சொல்ல விரும்புகின்ற செய்தி யாதேனும் உண்டா?**

ஒரு இசையாசிரியராக தாங்கள் சமூகத்திற்கு சொல்ல விரும்புகின்ற செய்தி யாதேனும் உண்டா?

இசை ஒரு யோகக் கலை என்பதை உணர்ந்து மற்றவர்களை இலகுவில் மகிழ்ச்சிப்படுத்தக் கூடிய கலை என்பதை அறிந்து இசையைப் பயில வேண்டும். அர்ப்பணிப்பும் இசை மீதான ஈடுபாடும் கொண்டு ஆசிரியர்களிடம் இருந்து இசையை பயில வேண்டும்.

**வினா - வலுவிழப்புடன் கூடிய நபர்கள் தொடர்பான சமூகத்தின் செல்நெறி எவ்வாறு இருக்கிறது எனக் கூறமுடியுமா?**

முன்னைய காலங்களில் வலுவிழந்தவர்கள் எதனையும் செய்ய இயலாதவர்கள். அவர்கள் பயனற்றவர்கள் என்ற மனப்பாங்கு அனைவரிடமும் இருந்தது. தற்போது இந்த நிலையில் படிப்படியாக மாற்றம் ஏற்பட்டு வருகின்றது. வலு விழப்புடன் கூடிய நபர்களும் சமூகத்தவர்களுக்கு இணையாக தம்மைத் தற்போது நிலைப்படுத்தி வருகின்றனர். உதாரணமாகச் சொல்வதாயின் விரிவுரையாளர் இரவீந்திரன் அவர்கள் ஒரு முதுமானியாக இருக்கிறார். தேசிய கல்வியியற் கல்லூரியில் கண்பார்வையுடைய முதுமானி ஆற்றுகின்ற பணிகளையே இவரும் ஆற்றுகின்றார் சக விரிவுரையாளர் ஒருவருக்கு கொடுக்கப்படுகின்ற இடமும் கௌரவமும் இரவீந்திரன் அவர்களுக்கும் கொடுக்கப்பட வேண்டும். கொடுக்கப்படும்இதனைவலுவிந்தவர்களின் சமூக வகிபாகத்தை காட்டுவதற்கான சான்றுகளில் ஒன்றாக நாம் காணமுடியும்.

**வினா - வலுவிழந்தவர்களுக்குத் தாங்கள் யாதேனும் செய்தி சொல்ல விரும்புகிறீர்களா?**

வலு விழந்தவர்கள் தம்மைத்தாமே தாழ்த்திக் கொள்வதை முதலில் நிறுத்திக் கொள்ள வேண்டும். தம்மைத்தாமே உணர்ந்து எவை பொருத்தமோ எவை முடியுமோ அவற்றில் சிறப்பு தேர்ச்சி பெறவேண்டும் தமக்கு அனுசரணையாக இருப்பவர்களின் உதவியை முறையாகப் பயன்படுத்தி வாழ்வில் வெற்றி பெற வேண்டும்.

“முத்துமுத்தான இரத்தினங்கள்....” என்ற ஆசிரிய கீதத்தை யாத்தவராகவும் அதற்கு இசை வகுத்தவராகவும் தாங்கள் இருக்கின்றீர்கள் அந்த கீதத்தின் சிறப்புப் பற்றிச் சற்று சொல்லுங்கள்.

1980 களில் நான் ஆசிரியர்களுக்கான 21 நாள் வதிவிடக் கருத்தரங்கு ஒன்றுக்கு விரிவுரையாளராகச் சென்றிருந்தேன். அதில் மெல்லிசைப் பாடல் ஒன்றை ஆசிரிய மாணவர்களுக்கு பயிற்றுவிக்கின்ற ஒரு பயிற்சி இருந்தது அதற்காக நான் ஒரு பாடலை உருவாக்கினேன். அந்தப் பாடலைக் கேட்ட வர்த்தகத் துறை விரிவுரையாளர் ஒருவர் இந்தப் பாடல் சிறப்பாகவில்லை. இதை ஏன் உருவாக்கினீர் என்று கேட்டார். எனது பாடலை சிறந்ததில்லை என்று எவரும் கூறி அதுவரை நான் கேட்டதில்லை. இந்தச் சம்பவம் என்னை மிகவும் பாதித்தது. ஆனாலும் மறுநாள் காலை புதியதோர் பாடலை நான் யாத்தேன். ஆசிரியர்களாக வரப்போகின்றவர்களுக்கான பாடலாக அமைய வேண்டும் என்ற எண்ணத்தோடு அந்தப் பாடலை யாத்தேன். அன்றைய

மதியப் பொழுதில் அங்கு வந்த கணபதிப் பிள்ளை ஆசிரியர் அவர்கள் இந்தப் பாடலை சிறப்பாக இருக்கிறது என்று கூறி ஒலிப் பேழையில் பதிவேற்றிக் கொண்டு சென்றார். அன்று மாலை வர்த்தகத்துறை விரிவுரை யாளர் இந்தப் பாடலைக் கேட்டு மிகவும் சிறப் பாக இருக்கிறது என்று கூறினார். எனக்கு அது மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. வலி யில் விழைந்த நல்லதோர் பாடலாக நான் கண் டேன். 1985 ஆம் ஆண்டு இப்பாடல் உருவாக் கப்பட்டது. இந்தப் பாடல் எழுதப்பட்ட போது ஆசிரியர் கீதமாக எழுதப்படவில்லை. 1990 ஆம் ஆண்டு அப்போது பணிப்பாளராக இருந்த கணபதிப்பிள்ளை அவர்களும் சிவானந்தன் அவர்களும் குழுவாக இணைந்து முத்துமுத் தான இரத்தினங்கள் என்கின்ற இந்தப் பாடலை ஆசிரிய கீதமாகப் பிரகடனப் படுத்தினர்.

**வினா - உங்கள் ஆக்க முயற்சிகள் பற் றியும் பொழுது போக்குகள் பற்றியும் குறிப் பிட முடியுமா?**

1997 ஆம் ஆண்டு சங்கீதம் என்றொரு நூலை நான் எழுதினேன். சங்கீதத்தில் ஏலவே இருக் கின்ற விடயங்களை மாணவர்களுக்கு ஏற்ற வகையில் இலகுபடுத்தி அந்த நூலை எழுதி னேன். இதைத் தொடர்ந்து பலர் இசைத்துறை சார்ந்து நூல்களை எழுதியிருக்கிறார்கள். ஆண்டு 1 தொடக்கம் 11 வரையுள்ள மாணவர் களுக்காக பாடத்திட்டத்தில் உள்வாங்கப்பட்ட தேவாரம், திருவாசகம், திருப்புகழ் ஆகிய வற்றை எட்டு இறுவட்டுக்களில் என்னால் பாடப்பட்டு சாவகச்சேரி வலயத்தால் வெளி யீடு செய்யப்பட்டது. பண்டிதர் கடம்பேஸ்வரன் அவர்களால் எழுதப்பட்ட சிறுவர் பாடல்கள் என்னால் மெட்டமைக்கப்பட்டு பாடப்பட்டு வெளி யிடப்பட்டது. இதற்கு றொபேட் அவர்கள் துணை இசை வழங்கியிருந்தார். இரண்டாம் வாய்ப்பாடு தொடக்கம் பதினாறாம் வாய்ப் பாடு வரை மாணவர்கள் இலகுவாக மனனம் செய்யத் தக்கதாக இசை வகுத்து என்னால் வெளியிடப்பட்டிருக்கின்றது. மாணவர்கள் வாய்ப்பாட்டைப் பாடமாக்குகின்றோம் என் கின்ற பழுவை உணராமல் கற்றல் செயற் பாட்டில் ஈடுபடுவதற்கு இந்த முயற்சி உதவும் என நான் நம்புகின்றேன். இவற்றை தவிர ஆறு நாட்டிய அரங்கேற்றங்களுக்காக பாடி யிருக்கிறேன். இசைக் கச்சேரிகள் ஆசிரியர் களுக்கான கருத்தரங்குகள் ஆகியவற்றை நிகழ்த்தியிருக்கிறேன். ஆசிரியர்களுக்கான வகுப்புகள் ஏனைய தனியார் வகுப்புகள் ஆகி யவற்றையும் தற்போதும் நடத்தி வருகின் றேன். இப்படியான எனது முயற்சிகளே எனது ஆக்க முயற்சிகளாகவும் பொழுது போக்கு அம்சங்களாகவும் அமைந்திருக்கின்றன.

பொன் ஸ்ரீ வாமதேவன் ஆசிரியர் அவர்க ளின் கைத்தொலைபேசி இனிமையான இரா கத்தை பிரசவித்து நீண்ட மணிப் பொழுது நகர்ந்திருக்கின்றது என்பதை நினைவு படுத் துகின்றது. நன்றி வாமதேவன் ஆசிரியர் அவர் களே தங்களதும் தங்கள் குடும்பத்தாரதும் வாழ்வு சிறக்க நாம் இறைவனை வேண் டுகின்றோம்.

பொன் ஸ்ரீ வாமதேவன் வலு வளம் பெற்று எங்கள் சமூகத்தை ஆற்றுப்படுத்தும் நீரோ டையாக விளங்க வாழ்த்துகின்றேன்.

நன்றி வணக்கம்

முற்றத்து மல்லிகைப் பகுதிக்காய்
திரு க.தர்மசேகரம்

# வலுவிடம் கேளுங்கள்

**முல்லைத்தீவு சங்கர்**

வினா - எமது நாட்டில் மாற்றுத்திற னாளிகளுக்கென பல நிறுவனங்கள் பணியாற்றுகின்றன. இந்த நிறுவனங்களில் வேலை செய்பவர்களில் பலர் மாற்றுத்தி றன் அல்லாதவர்களாகவே உள்ளனர். இதற் கான காரணம் என்ன?

விடை - மாற்றுத்திறனாளிகளுக்காக பணி யாற்றுகின்ற நிறுவனங்களில் பொருத்தமான இடங்களுக்கு பொருத்தமான மாற்றுத்தினானி களை நியமிப்பதில் சம்மந்தப்பட்ட நிறுவனங் களை சார்ந்தவர்கள் முன்னுரிமை வழங்கு பவர்களாக இருக்க வேண்டும். ஏனைய நிறு வனங்களை விட மாற்றுத்திறனாளிகளுக் காக பணியாற்றுகின்ற நிறுவனங்கள் இந்த விடயத்தில் அதிக கரிசனை செலுத்த வேண டும். இது ஒரு புறமிருக்க மாற்றுத் திறனாளி களும் பொருத்தமான பணிகளை ஏற்கக் கூடிய வர்களாகவும், அர்ப்பணிப்பும் முயற்சியுமுடை யவர்களாகவும் இருக்க வேண்டும் என்பதை யும் நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

**வாசகர் பலரது வேண்டுகோளுக்கு அமைவாக வலு தரும் ஜோதிடம் என்னும் புதிய பகுதி இவ் இதழ் முதல் மலர்கிறது**

## எண்ணக் கிண்ணம்

# ஊனம்

புலனற்று இருப்பதல்ல ஊனம்
புண்படுத்தி பேசுவதே ஊனம்
அறிவுத்திறன் குன்றியதல்ல ஊனம்
அடிமையாய் வாழ்வதே ஊனம்

நோயுற்று வாழ்வதல்ல ஊனம்
நோவின் வலி போக்காமையே ஊனம்
உளவியல் குறைபாடல்ல ஊனம்
உளம் நோகடித்தலே ஊனம்

கண்ணின்றி வாழ்வதல்ல ஊனம்
கற்புநெறி தவறுவதே ஊனம்
ஊமையாய் இருத்தல்அல்ல ஊனம்
உண்மை நிலை அறியாமையே ஊனம்

காலின்றி இருப்பதல்ல ஊனம்
காலத்தை வெல்லாமையே ஊனம்
கையின்றி வாழ்வதல்ல ஊனம்
நம்பிக்கை இழப்பதே ஊனம்

செவிடராய் இருப்பதல்ல ஊனம்
செவிக்கினியமொழிபேசாமையேஊனம்
அங்கவீனராய் வாழ்வதல்ல ஊனம்
அடுத்தோர் குடி கெடுத்தலே ஊனம்

துன்பத்தில் வாழ்வதல்ல ஊனம்
பிறர் துன்பம்பாராமையே ஊனம்
அநாதையாய் வாழ்வதல்ல ஊனம்
அன்பின்றி வாழ்வதே ஊனம்




ஆக்கம் ஜோதிடர் வித்யா ரத்னா
V.A. சிவராசா (B.A., B.Phil., Dip in Edu.)

(ஆதாரம் - பண்டித் சேதுராமனின் நீங்களும் அதிஷ்டசாலி ஆகலாம்)

**எண் ஜோதிடம்**

ஆயகலைகள் அறுபத்துநான்கில் ஒன்றான ஜோதிடம் இன்று உலகளாவிய ரீதியில் மக்கள் மத்தியில் செல்வாக்கு செலுத்தி வருகின்றது. ஒருவடைய பெயரெண் அதிஷ்ட எண்ணில் அமைந்திருப்பின் எண்ணிய குறிக்கோளை அடையலாம் என்பது யதார்த்தமான முடிவாகும்.

விதியினால் பலம் குன்றியவர்களுக்கு வலுச் சேர்ப்பது ஒருவருடைய பெயரெண் ஆகும்.

| எழுத்துக்கள் | எண் | ஆட்சிக் கிரகம் |
|---|---|---|
| A, I. Q. Y | 1 | சூரியன் |
| B , K, R | 2 | சந்திரன் |
| C,G,L,S | 3 | குரு |
| D, M, T | 4 | ராகு |
| E, H, N, X | 5 | புதன் |
| U, V, W | 6 | சுக்கிரன் |
| Q.Z | 7 | கேது |
| F.P | 8 | சனீஸ்வரன் |

**பெயரெண் காணும் முறை**

உதாரணம் : V. A. S I V A R A S A

6 +1 +3 +1+ 6+1 +2 +1+ 1+1

பெயரெண் 23 : 2 +3 = 5

**பிறந்த திகதிகள்**

**01-10-19-28 (சூரியன்)**

சூரிய ஆதிக்கராகிய உங்களின் பெயரினை 28 தவிர 1 ம் எண்ணில் வைத்தால் அதிஷ்டம் உங்களைத் தேடி வரும்.

**02-11-20-29 (சந்திரன்)**

சந்திரன் சூரியனிடம் இருந்து ஒளி வாங்குவதினால் உங்கள் பெயர்களை 1 ம் எண்ணில் வைத்து அதிஷ்டம் பெறலாம். பெண்களாயின் 6 ஆம் எண்ணில் அமைக்கலாம்.

**03-12-21-30 (குரு (வியாழன்)**

பொன்னவனுக்கு (வியாழன்) சேய் ஒழியப் பொருந்தாதாரில்லை (செய்வாய்) உங்கள் பெயர் 9 ஆம் எண்ணில் (18 தவிர) அமைவது சிறப்பாகும்.

**04-13-22-31 (ராகு)**

உங்கள் பெயரினை 1 ம் எண்ணில் வைத்தால் அதிக நன்மைகள் உண்டாகும்.

**05- 14- 23 (புதன்)**

துர் அதிஷ்டம் விதிகளை 5 ஆம் எண் மாற்றி விடுவதினால் உங்களின் நாமங்களை 32 எண் தவிர 5 ஆம் எண்ணிலேயே அமையுங்கள். 9 ஆம் எண்ணும் எதிர்பார்க்கின்ற அதிஷ்டங்களை கொண்டுவரும்.

**06-15-24 (சுக்கிரன்)**

உங்களின் பெயர்கள் 6 அல்லது 9 ஆம் எண்ணில் அமையும் போது நல்வாழ்வு கிடைக்கப் பெறுவீர், 3 ஆம் எண்ணைத் தவிர்த்து விடவும்.

**7-16-25 (கேது)**

ஞான காரனான கேதுவின் எண்ணில் பிறந்த நீங்கள் இன்ப சுகங்களை அனுபவித்து வெற்றி நாயகனாக விளங்க வேண்டின் 5 ஆம் அல்லது 6 ஆம் எண்ணில் பெயரினை அமையுங்கள்

**8-17-26 (சனீஸ்வரன்)**

விதியின் கைப்பாவையாக விளங்கும் நீங்கள்5ஆம்எண்ணைப்பெயரெண்ணாகத்துணை கொண்டால் நிச்சயம் விமோசனம் ஏற்படும்.

**9 - 18- 27 (செவ்வாய்)**

போராட்ட வரலாறு நீங்கப் பெற்று சாதனை புரிந்து பெயரினை முத்திரையாகப் பதிக்க 9 அல்லது 5 ஆம் எண்ணில் பெயரினை அமைத்துக் கொள்ளுங்கள்.

**பொதுவான விதி**

எந்த எண்ணில் பிறந்தவர்களானாலும் பிறந்த திகதி மாதம் ஆண்டு என்பவற்றைக் கூட்ட 8 எண்வரின் 5 ஆம் எண்ணிலேயே பெயர் அமைப்பின், வெற்றி கைகூடும்.

ஒருவருக்கு சரியானபடி பெயரமையின் காரியசித்தி ஏற்படும்

CEYLON

3+5+1+3+7+5 = 24

இலங்கை நாட்டினை சிலோன் என்று அழைத்த காலம் அமைதிப் பூங்காவாக இருந்தது. ஆனால் சிறிலங்கா என பெயர்மாற்றப்பட்ட போது

SRI LANKA

3+2+1+3+1+5+2+1 = 1+8 = 9

இவ் எண்ணானது தெய்வீகத்தின் அழிவினையும் யுத்தத்தின் பிடியில் சிக்குவதையும் குறிக்கும். இதனால் இங்கு அமைதியற்ற சூழல் காணப்படுகிறது.

இலங்கைச் சமூகம் போர்ச் சூழல் நீங்கியாம் எல்லோரும் ஒரு தாய் பெற்ற பிள்ளைகள் போல் வாழ்வாங்கு வாழ

SHRI LANKA

3+5+2+1+3+1+5+2+1 = 2+3 = 5 ஆம் எண்ணில் பெயர் அமைத்தால் நன்மைகள் உண்டாகும்.

# எழுதுங்கள் வெல்லுங்கள்

## போட்டி இல.09 வினாக்கள்

1. தற்போதைய வடமாகாண ஆளுநர் பெயர் யாது?
2. 2014 ம் ஆண்டு நடைபெற்ற உலகக்கிண்ண உதைபந்தாட்ட போட்டியில் வெற்றி பெற்ற நாடு எது?
3. இலவு மரத்தின் தாவரவியல் பெயர் யாது?
4. பறவை இனத்தில் மிகச்சிறிய பறவையின் பெயர் என்ன?
5. இந்தியாவின் குடியரசு தினம் எப்போது கொண்டாடப்படுகிறது?
6. Nicholas James Vujicic (நிகோலஸ்ஜேமஸ் வோயிச்சி) என்பவரால் ஸ்தாபிக்கப்பட்ட நிறுவனம் யாது?
7. கருங்குழிகளில் இருந்து துணிக்கைகள் வெளியேறுகின்றன என்பதை கண்டறிந்த விஞ்ஞானி யார்?
8. Daisy என்பதன் விரிவாக்கம் யாது?
9. Autism (ஓட்டிசம்) என்பதன் தமிழ் பதம் யாது?
10. 20.02.2016 அன்று கைதடி நவில்ட் பாடசாலை எத்தனையாவது வருட நிறைவு நாளை கொண்டாடியது?

**இவ் வினாக்களுக்குரிய சரியான விடைகளை கீழ் உள்ள புள்ளிக்கோட்டில் எழுதி அனுப்புங்கள். இப் படிவத்தில் எழுதி அனுப்பி வைக்கப்படும் விடைகள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும்.**

**விடைகளை 30.05.2016 க்கு முன்னர் எமக்கு கிடைக்கக்கூடியவாறு அனுப்பிவையுங்கள். சரியான விடை-களை எழுதி அனுப்பும் வெற்றியாளர்களுக்கு பரிசில்கள் வழங்கப்படும்.**

**போட்டி இல - 08 இல் வெற்றிபெற்றோர் விபரம்**

பரமேஸ்வரன் அஜந்தன்
உழவர் வீதி,
தாவடி வடக்கு,
கொக்குவில்.

விடைகள் போட்டி இல. 09

## எழுதுங்கள் வெல்லுங்கள்

01.......................................................................

02.......................................................................

03.......................................................................

04.......................................................................

05.......................................................................

06.......................................................................

07.......................................................................

08.......................................................................

09.......................................................................

10.......................................................................

1. முழுப் பெயர்: ..........................................................

2. தபால் முகவரி: ..........................................................

3.தொலைபேசி இலக்கம் ..........................................................

4. பிறந்த ஆண்டு, மாதம், திகதி ..........................................................

### போட்டி இல - 08 விடைகள்

1. கரு ஜெய சூரிய
2. 1914 July 28 - 1918 Nov 11
3. ரவீந்திர நாத் தாகூர்
4. October 01
5. 1930 ம் ஆண்டு லத்தீன் அமெரிக்காவில் உள்ள உருகுவே நாட்டில்
6. அண்டவெளி,குவாண்ட ஈர்ப்பு(விண்வெளித்துறை)
7. நைசியா
8. IPC
9. பெனோ ஷோப்பன்
10. பார்வை மற்றும் கேட்டல் பேச்சுத்திறன் குன்றியோர்

அனுப்ப வேண்டிய முகவரி :

எழுதுங்கள் வெல்லுங்கள்

கருவி

மாற்றுத்திறனாளிகளின் சமூக வள நிலையம்

இல.1166/15 அருளம்பலம் வீதி.

நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.

**சுவிஸலாந்தில் வதியும் திரு. T. இரவீந்திரன் அவர்களின் 50 ஆவது அகவையை ஒட்டிய மதியபோசன மற்றும் உலர் உணவு வழங்கிய நிகழ்வின் நிழல்கள்**





















அனைத்து விதமான சுபகாரியங்களையும்
எண்ணம் போல் செய்து மகிழ உங்களை
அன்புடன் வரவேற்கின்றோம்.



**Raajeshwariy Hall**

## *3 Luxurious Halls under One Roof*

*Where Your Dream Comes True...*

*Complete Package for weddings & Parties...*

- Wedding
- Reception
- Puberty Ceremony
- Birthday
- Conference
- Get together

*With Excellent Food & Excellent Services*





132, Palali Road, Kondavil, Jaffna.

**021 205 3999**

www.rajeswarygroup.com rajeshwaryjaffna@hotmail.com

தேவி Printers, Jaffna. 021 300 3030